
"புண்ணிய பாபமும்"!
"ஐதீதிய தர்மமும்"!
பூஜ்யஸ்ரீ சத்குரு தாளி பாபா



# "புண்ணிய பாபமும்"!
# "ஸத்திய தர்மமும்"!

# பொருளடக்கம்


1. தேவ தெய்வ ரகசியங்கள்---------------------------------------------------1

௨. மன உருக்கமும், கண்ணீர் பெருக்கமும்----------------------------------15

௩. புண்ணிய பாபமும், ஸத்திய தர்மமும்-------------------------------------18

௪. பகவான் நித்திய முக்தன்------------------------------------------------௪௨

5. வாக்கே வாழ்க்கை--------------------------------------------------------6௩

6. பிரார்த்தனை--------------------------------------------------------------70


எல்லாம் நீ!



ஸத்தியம் பேசு. (ஸத்தியவாக்கை) தர்மம் செய்.

ஓம்

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

"ஸ்ரீஸத்குரு திருவடி துணை!"

"நம்பினோர் கெடுவதில்லை!"

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம்,"

"ஓம்"

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம்,"

"அகமே எல்லாம்!"

"ஜெகம், பரமும், ஜீவர்களும்;"

"சிறிதும் இல்லை"!

"தெய்வம் மனுஷ்யரூபம்"!

(இக்கலியில், மனித வடிவில்தான், தெய்வம் வரும்.)



# 1. உ

# "தேவ தெய்வ" "ரகசியங்கள்"! "காலாதீத பரமே"!

செயல்படமுடியாத் தன்மையினால்; அதுவே தன்னை, "சதா சிவம்"! என்றும்; "மஹேஸ்வரன்"! எனவும், ஆக்கிக் கொண்டது. சும்மா சுகமாக இருக்கும் நிலை சதாசிவம் என்றும். அனைத்து அண்டங்களையும், அதாவது கோடானு கோடி கோள்களையும், கோடானுகோடி "சூரிய சந்திரன்களையும்"! சிருஷ்டி பண்ணி, மஹேஸ்வரன், விட்டு விட்டு, தாம் சும்மா சுகமாக இருக்கும் நிலை (அவர்களிலிருந்து) சதாசிவம். மஹேஸ்வரன் இவற்றிலிருந்து, தோன்றியதே, சிருஷ்டிக்கு, "பிரம்மன்"! என்றும்; ரக்ஷிப்புக்கு, "விஷ்ணு"! என்றும்; மாற்றத்திற்கும், மறைப்புக்கும், "சிவன்" என்றும்; தாம் தாமே ஆனது. இவை அனைத்தும் "யோக மாயாவின்" சாமர்த்தியமாகும்.



உ

மேலே சொன்ன திரி மூர்த்திகளின், "சாயலான (நிழல்களான)" "யோகமாயாவானது" தம்மை "முப்பெரும்சக்தி" தானாக ஆக்கிக் கொண்டு, "பஞ்சபூதங்கள்" உண்டு பண்ணி, அவைகளுக்கு, இயல்பான தன்மை உண்டென்ற நிலையில், "இயற்கை" என, நாமம் சூட்டியதென, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

மேலே சொன்னவைகளில், மூன்று நிலைகளை பார்த்தோம்.

1. காலாதீதபரம். 2. இரு பிரிவுகள். 3. திரி கர்த்தாக்கள்.

மேலே கூறிய இவர்கள், பஞ்ச கர்த்தாக்களும், மற்றைய மூன்று யுகங்களிலும் (கிருத, திரேதா, துவாபர) தம்மை "ஸ்ரீமஹான்களாகவே", அதாவது, மஹாரிஷிகள்! ரிஷீஸ்வரர்கள்! முனிவர்கள்! ராஜரிஷி! பிரம்ம ரிஷி! யோகீஸ்வரர்கள்! மேலும் தம்மை, அனேக பிரிவுகளாக "தம்மைத்தாமே" பிரித்துக் கொண்டதே தவிர, அதற்கு "அன்னியம்" எதுவுமே இல்லை, யென பிரமாணமாகச் சொல்லலாம்!

அம்மூன்று யுகங்களிலும், நேரே ஆனந்த மயமாகவே இருந்தார்கள்.



(ஆதல் த்வாபர யுக 2 கடையில் மட்டும்)

அக்காலங்களில், மனம் படைத்த மனிதன், எங்கெங்கோ சிலர் இருக்கலாம், அவர்களும், உபாதை இல்லாதவர்களே! ஓரளவு "அமைதியோடு" கூடியவர்களாகும்!

மற்றைய மூன்று யுகங்களிலும், "மனம்" அவர்கள் வசம் இருந்தது. இக்கலியுகத்தில் மட்டும்; அனைவரும் "மனம் வசம் அகப்பட்டுக் கொண்டார்கள்!"

"அன்று" மஹான்களாயிருந்தவர்கள்;
"இன்று" மகன் என்ற மனிதனாகி விட்டார்கள்.

இக்கலியுக சாஸ்திரம், எப்படி சொல்லியது என்றால்?

33 கோடி தேவர்கள் என்றும்;
48 ஆயிரம் மஹாரிஷிகள் என்றும்;
84 லக்ஷம் ஜீவவர்க்கங்கள் என்றும்; சொல்வர்.

குறிப்பு:- இந்த 84 லக்ஷம், ஜீவவர்க்கங்களிலும், மனம் படைத்த மனிதன் மட்டும் சேர்க்கப் படவில்லை.

காரணம்:- இவன் ஜீவ வர்க்கம் இல்லை. "ஜீவாத்மா" என, ஆன்ம சொரூபத்தில், சேர்க்கப்படுகிறான்.



குறிப்பு:- மனதை "தம்வசம்" ஆக்கியவன் "மஹான்" என்றும்; மனம் வசம் "அகப்பட்டவன்" மனிதன் என்ற "மகன்" என்றும், ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

மேலே கூறிய ஜீவவர்க்கங்கள், எல்லாமே, ஒருவகை "புனிதமானவைகளே!"

இங்கு இந்த மனிதனும், மற்றும் ஜீவவர்க்கங்களும், காலாந்த ஒன்றுன அநந்த "அந்நியமாய்" இல்லவே இல்லை!

இக்கலியுகத்தில் மட்டும், "தர்மாதர்மங்கள்!" சற்று மாற்றி, அமைக்கப்படுகின்றன!

காரணம்:- கோரமான, வக்ர குண தோஷங்கள் பிடிக்கப்பட வேண்டும், என்பதே "நியதி!"

ஆகவே, இக்கலியுகத்தில் மட்டும், "கண்டிப்பும்", "தண்டிப்பும்", "சகிப்பும்" (மறைப்பும், அழிப்பும்) தேவைப்படுகிறது.

குறிப்பு:- இப்போது யாம் கூறுவது அனைத்தும், "ஆத்மஞான" சாதகர்களுக்கு இல்லவே இல்லை

நீங்கள் உங்கள் சாதனையிலிருந்து அணுவும் பிசகவேண்டாம்.



உ

இது இன்றைய உலக தர்மா தர்மமாகும்!

இவைகளை, தெரிந்து கொண்டால் நீங்கள் "விலகிவாழ" வழி உண்டு!

இனி கவனிக்கவும்:— மேலே கூறிய தண்டிப்பு, கண்டிப்பு, பழிப்பு,

இவைகளை, பஞ்ச கர்த்தாக்களும் செய்ய கூடாது, செய்ய முடியாது! அதே போல் அருள் உள்ள

விநாயகரே! முருகனே! ராமனே! கண்ணனே!

மற்றும் "ஸத்வகுணமுள்ள" சாந்தி சொரூபமான "அம்பாளோ"

செய்யக் கூடாது! செய்யவும் முடியாது!

இவ்வாறு உலகமாக இருந்தாலும், இன்றைய காலத்தில், "இருப்பதைப்போல்" உள்ள இவ்வுலகிற்கு, பாதுகாவல் தேவை!

அப்பாதுகாப்பின் நிமித்தமாக, 33 கோடி தேவர்களில், "காலபாதி" தேவர்கள் அவைகள் "காவல் தேவதை"களாக, சிறு தெய்வமாக இப்பூமியில் வந்து தம் காரியங்களை செய்கின்றனர்.

உ



ஆகவே இக்காவல் தெய்வங்களுக்கு,
மேலே கூறிய, கண்டிப்பு, தண்டிப்பு,
பக்ஷிப்பு ஆகிய இம்மூன்றையும்

**முத்தொழிலாக**

சிறப்பாக செய்து முடிக்க "**மனம்**"
அவசியம் தேவைப்படுகிறது.

ஆனாலும் மனம், அவர்கள் வசம் இருக்குமே
தவிர, மனம் வசம், அவர்கள் அகப்படமாட்டார்கள்!

மேலும், திரிகர்ஜ தாக்கங்களைப் போல் "**மாயா**"
வும், அவர்களுக்கு உண்டு. அதை அதிகம் பயன்படுத்த முடியாது!

காரணம்?

மாயா அதிகமாக இருந்தால், அவர்களின்
"**முத்தொழில்**" சற்று தடுமையாகிவிடும்.
எனக் குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும் இக்காவல்
தெய்வங்களுக்கு, ஓர் விதி முறை, கட்டுப்பாடு,
உண்டு. அது யாதெனில்? முன்மடலில் கூறிய
"**ஏழு ஸத்வகுண**" தெய்வங்களை,
மட்டும்
வழிபாடு செய்பவர்களிடம் (அம்பாளை சேர்த்து எட்டாகும்)
அவர்கள்/ன் வினை பாதிப்பு இல்லாமலும், கண்டிப்பு,
தண்டிப்பு இல்லாமலும், "**கருணையோடு!**"



உ

நடந்துகொள்ள வேண்டுமென்றும், "ஓர் கருணைமறு" உள்ளது அதை அவர்கள் ஒன்றே ஆக வேண்டும்! இக்காவல் தெய்வங்கள், மூத்தோழி விறல் சுற்று "கருமையாக" இருப்பதெலிவாம் "வஞ்சம்" தீர்ப்பதாக இவ்வே திருந்து வதற்காக செய்யும், "அறிவுப்பாடம்" ஆகும்!

முன்மடலில் கூறிய, ஸத்வ குண தெய்வங்களாவன:-

"பிரம்மா" "விஷ்ணு" "சிவன்" "விநாயகன்" "முருகன்" "ராமன்" "கண்ணன்" இவர்களுடன் "அம்பாள்" ஆகிய 7+1=8 ஆகும்! (இவர்கள் அனைவரும் ஸ்ரீபகவானே!)

ஸ்ரீபகவான், (இறைவன்) ஜோதி சொரூபமே தவிர, உருவமாக காணக் கூடியவனல்ல. ஒன்றுடன் ஒன்று "உராய்வதால் அக்கினி" எப்படி தோன்றுகிறதோ, அதே நியதியில், நம் மனதை, இறை சொரூபம் என்ற "வடிவில்" உராய்ந்தால், ஸ்ரீ பகவான் அவஸ்யம் தோன்றுவான். இது நியதி!




உ

1. ஓர் நாமரூபமற்ற, இறைவனே,
"உண்டு" என ஸத்தியமாய்,
"நம்புவது" ஒன்று!

2. உள்ளரக்கம், துடிப்பு, உருக்கத்துடன்,
"காணவேண்டும்" என்ற தண்ணீர்
பெருக்கம், இரண்டாவதாகும்!

மேலே கூறிய, இந்த இரண்டும், ஒன்றுடன் ஒன்று
"ஊறவேண்டும்"! இதுவே அவஸ்யம்
ஸ்ரீபகவான் காட்சி கிடைக்கும்!
ஸ்ரீபகவான் சொரூபத்தின், ஓர் வடிவம். இது உதாரணமே.
உண்மையல்ல! ஆனால் அனுபவம் கூறுவதற்கு,
உபயோகமாக இருக்கும்.
ஓர் அகல் விளக்கை, வைத்து சித்தரித்து காட்டுகிறோம்.
உணர்வால் உணர்க!




1. அக்கினி சுடர்!
2. ஆகாய நீலமுமல்ல! கருநீலமுமல்ல! ஆனால் அது ஓர்
குளுமையான நீலம்!
3. தூய்மையான, குளுமையான, ஓர் வெண் சுடர்!



ஓ

இம் மூன்றையும், அகல் விளக்கோ,
ஒரு திரி உள்ளிருந்து விளக்கோ,
இவற்றில் மட்டும் காணலாம்! மற்றும்
எந்த அக்கினியிலும் காண முடியாது.

என்னே, ஒரே ஜோதி, இம்மூன்றையும் முக்கியமாக்

அத்தீபம் "அசையாமல்"
"சுடர் விட்டு எரியவேண்டும்"!
குதிக்கவும் ஆடவும் கூடாது!

1. அக்கினி சுடர் என்பது, ஸ்ரீ பகவான் வடிவம்.
2. கருமையான நீலம் என்பது, யோகமாயா.
3. ஓர் வெண் சுடர் என்பது, ஆத்ம ஒளி.

"இது உதாரணமே"! இருந்து,
ஸ்ரீ பகவத் சொரூபத்திற்குள், யோகமாயா அடங்கி
அச் "சுடர்வடிவை" வெளிக்காட்டுகிறது.
அச்சுடருக்குள், "ஆத்மா" இருந்து கொண்டு,
அவ்விரண்டையும் (பகவானையும், மாயாவையும்) விளங்கப் பண்ணுகிறதும்
"இம்மூன்றும்" இணைந்து செயல்படும் போது,
உன் "கர்ப்பவடிவில்" ஸ்ரீ பகவான்,
அங்கு தோன்றுவான்! இந்த சுடர் ஒளியாகிய ஸ்ரீ பகவான்
காட்சி பெற, அனைத்தையும் விடுத்து, உருகும் உள்ளத்
துடனும், தரையின்றி பெருகும், கண்ணீர் பெருக்கத்
துடனும், "அழுதால் உன்னைப் பெறலாம்"!
என்ற நிலையில், அவனைப் பெறலாம். இது மெய்பக்தியத்தின்
ஸ்வய அநுபவமாகும்!



உ

தேவ தெய்வ ரகஸியங்களின் தொடர்ச்சி!

முன்பு 48 ஆயிரம் மஹரிஷிகள், எனசொன்னேமல்லவா? இவர்கள் அனைவரும், தபஸ், ஜபம், பக்தி, யக்யம், தியானம், யோகம் (சித்தியாகி, சித்தர் நிலை பெறுவிலே) மந்த்ர சித்தி, மேலும் அனேக ஸத்கிரிகைகள் செய்து, "உயர்நிலையை" பெற்றவர்களாகும் "விசாரஞானத்தால்" ஜீவன் முக்தி, பெற்றவர்கள் அல்ல, ஆனாலும் தேவ தெய்வ நிலையில் "ஸ்ரீமஹான்கள்" என்றநிலையை, பெற்றவர்களாகவும் இவர்கள், ஜபதபத்தால் உயர்ந்தவர்களாக, இருப்பதால் "மஹரிஷிகள்", என, அழைக்கப்பட்டார்கள்! இவர்களில் "பாதி" பேருக்கு அடுத்து இக் "கலியுக மஹான்களாக"/ திருஅவதாரம், செய்திருப்பதாக ஸ்ரீமஹான் மூலம் அறிகிறோம்! எப்படி என்றால்?



இக்கலியுகத்திற்கும், வழிகாட்டிகள்,
அவசியமாகிறது. அந்த வழிகாட்டுதலும்,
இக் "கலிதோஷத்திற்கு!!"
ஏற்ற நிலையில், அமைய வேண்டுமென்பதே, "தெய்வ
நியதி" ஆகும். இந்த ஒரு யுகத்திற்கு மட்டும்,
ஸ்ரீ பகவத் சொரூபம், நம்மை, மறைத்துக் கொள்ள
வேணுமென்று ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள். ஆனால்,
பொருளோடு கவனித்தால், தெய்வம் நம்மை மறைக்காது
என்றே சொல்ல வேண்டும். ஏன் என்றால் ஸ்ரீ பகவான்
என்றுமே, "கருணையின்!" வடிவமாகும்.
இது கலிக்கே உரிய காலமாக இருப்பதால், இது
வக்ர குணங்கள் நிறைந்த "கொடூரமான
காலமாகும். ஆகவே இக்கலியுக மாந்தர் அனைவரும்,
மேலே சொன்ன கோர குணங்களால், பீடிக்கப்பட்டு விஷய
ஆசைகள் "நிரம்பியவர்களாய்!"
ஸ்ரீ பகவானை "மறந்தே!" ஆக வேண்டும்!
இதுவே கலியுக நியதியாகும்!



"கதிமோட்சம்" இல்லாமல், போகமே கதி யென அறியாமை நிறைந்துழலும், ஆன்மாக்களுக்காக அந்த "பரமே" தம் கருணையால், முன்கூறிய நாற்பத்தி எண்ணாயிரம், மகரிஷிகளையும், பூலோகத்தில் "கலியுகமஹான்களாக" தோன்றச் செய்து, பக்தியின் ஒழுக்க நெறிகளை இவரும், உடல் நலம் பெற, யோக நெறிமுறைகளை இவரும், போக க்ஷேமம் என்றுநிலைக்கு, வழிபாடு முறைகளை இவரும், யாகயக்ஞங்களை இவரும், அவர்களாகவே தங்கள் தங்கள் வாக்கால், பிணைந்து கொண்டும், கஷ்ட நஷ்ட, துக்க துயர பயம், முதலிய வைகளை சுற்றுசாந்தி செய்ய (அழிக்க அல்ல, மாற்றி அமைக்க) "சாந்தி" என்ற "பரிஹாரம்" செய்ய இவரும், மற்றும் அனேக ([illegible]) சன்மார்க்க நெறிமுறைகளை உணர்த்த பலரும், தோன்றச் செய்து இவை எவைகளிலும், பாதிக்கப்படாமல் "நாம், நாமே, நாமாக" இருக்கிறது என, தன்னை உணர்ந்த ஸ்ரீ மஹான்கள் கூறுவர்.



இந்த கலியுக மாந்தருக்கு, ஸ்ரீ பகவானை மறந்தாலும், ஏதேனும் ஓர் "தெய்வ விஸ்வாசம்" தான். உணவு, உடை, இருப்பிடம் ஆகிய, மூன்றையும், ஏங்கவும் முடியும்!! ஏங்க வேண்டும்!

ஆகவே அவரவர், "விஸ்வாசம்" இவைகளுக்கு ஏற்றநிலையில், ஏதேனும் ஓர் தெய்வத்தை, பற்றியே ஆக வேண்டும். ஆகவே இவர்கள் இச் சிறு தெய்வங்களை, பற்றியே ஆகவேண்டும். அவைகளை பற்ற, தக்கதொரு, குருமார்களையும் அவசியம் அடைந்தே ஆகவேண்டும்! ஆகவே தற்காலிகமாக, "குருமார்களாக" இருக்கக் கூடியவர்கள், அனைவருமே, "கலியுக மஹான்களாக" இருந்து கொண்டு, இந்த யுகத்திற்குரிய, "தர்மார்த்த, காம, மோக்ஷத்திற்கு" வழிகாட்டிகளாக இருக்கிறார்கள் என்பது, ஸத்தியமே! அதாவது புண்ணிய பாபங்களை, வழியுறுத்தி, மேலான பிறவியையும், சொர்க்காதிபத்யம் என்ற, பத முக்தியையும், (பரமுக்தியல்ல) கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என இவ்விதமாக முடிக்கிறேன்! எல்லாம் ஒன்றே! அதுநவமே! அதுசிவமே! அதுவாமே! அதுநீங்களே! இது ஸத்தியம்!!!

பாபா



# "மன உருக்கமும்! கண்ணீர் பெருக்கமும்!!"

எம் ஆத்மானந்த குழந்தைகளே! இந்த மன உருக்கமும், கண்ணீர் பெருக்கமும், இயல்பான ஏக்கத்தினால், வர வேண்டுமேயன்றி, போட்டி பொறாமையினால், வரவே கூடாது. அப்படி வந்தால், அது அகங்காரம் அதிகாரம், அபிமானம், சம்பந்தம் கொண்டு, பலனும் தராது. விபரீதமாயும் முடிவுறும். இங்கு பிறரைக் கவனிக்கும், ஒற்கவனசக்தியுடன், பாடுபட்டாலும், விரோத குரோதமாய் முடியும்.

உதாரணம்?

1. அவனைவிட நாம், அதிகமாக உருக வேண்டும்!
2. அவனுக்கு நாம் என்ன குறைந்தவளா?
3. அவனிடம் குருதேவர், அதிக நெருக்கம், கொள்கிறார். ஆகவே அவரிடம், ஓரவஞ்சகம் இருப்பதால், நம் உருக்கம் அவருக்கு தோற்றவில்லை போலும்?
4. மேலே சொன்னதை, சுட்டிக்காட்டி, நம் உருக்கத்தினை, அவரை இழுக்க வேண்டும்!
5. தன் தாய் வழியின், கஷ்ட நஷ்டங்களை, சுட்டிக்காட்டி, மனம் உருகி, அதை நிவர்த்திபண்ண என்னுவது!
6. நம் சாதனையின் காலங்களை, எண்ணி கணக்கு பார்த்து, அதனை எண்ணி எண்ணி உருகுவது!
7. பிறர் சாதனையின், காலங்களை கணக்கு பார்த்து, தன் சாதனையின் காலங்களையும், ஒப்பிட்டு பார்த்து, வேதனையால் உருகுவது!
8. சபலம், சலனம், சந்தேகத்தால் வேதனையுடன் உருகுவது!

இந்த எட்டும் "வேண்டாம்!"



உ

ஹே குருதேவா என்றே; வேறு எந்த
நாம ரூப முள்ள ஓர் ஸ்ரீபகவானை வரித்தோம்;

ஹே கருணைக்கடலே! க்ருபா சமுத்திரமே!
தயாநிதி! காருண்யசீலா! அபயம் தந்து
அருளும் எம் ஐயனே! உன்பாதமே கதி, யென
யாம் உன்னை உருகி அழைப்பது, நீ உணராதவரை? பட்ட தொல்லைகள்,
போதும் ஐயனே போதும்! மீண்டும் ஓர் கருக்குழி வேண்டாம்!
எத்தனை தான் ஜன்மமெடுத்தோம்? எத்தனை தான்
பட்ட துயரம்? அத்தனையும் நீ அறிந்தது தானே?
காலன் இத்தாவக்கணக்கை, பார்த்துக் கொண்டிருக்கிறான்!
சவக்குழி இத்தாவத்தை, விழுங்க, காத்துக் கொண்டிருக்கிறது!
அக்னி இவ்வுடல், எரிக்கக் காத்துக் கொண்டிருக்கிறான்!
கருக்குழிகளோ, ஜனனத்திற்கு வாவா என, அழைக்கிறது!
பிரம்மனோ, அடுத்த பிண்டத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறான்!
ஜீவாத்மாவமோ, ஓடி ஆடி சலித்து விட்டது! ஆனால்?
ஆசை மனமோ, குரங்காட்டம் ஆடிக் கொண்டிருக்கிறது!
விதி தேவனே, உன் விதிக்கு யாம் என் செய்வோம் என, நமக்கிட்ட
நியாயம், வழங்கிக் கொண்டிருக்கிறான்! தர்ம தேவனோ,
நீ கேட்டாய், யாம் தந்தோம் என்கிறான்! தான் நழுவிக் கொள்கிறான்
ஹே பிரபோ! என்ன எப்படி கேட்டோமோ? எதை
வாங்கினோமோ? எதை அனுபவிக்கின்றோமோ? இது
இன்னமும் எப்படி முடியுமோ? யாம் அறியோம்?
யாம் அறிந்ததெல்லாம், உன் பாதமே கதி!
ஹே பிரபோ! இந்த கணக்கு, வழக்கு, எல்லாம் எமக்கும்
வேண்டாம்! உமக்கும் வேண்டாம்! அப்பா அடித்தால்,
அம்மா அவசியம், அணைத்துக் கொள்வாள். அம்மா
அடித்தால், அப்பா அவசியம், அணைத்துக் கொள்வார்.
இங்கு எமக்கு அம்மையும், அப்பனும் நீ ஒருவனே! இனி
அடித்தது போதும், ஐயனே போதும்! இனி உன், கருணையின்
பார்வையில், உன் அபய கரம் கொண்டு, அணைத்திட
வேண்டும். இனியும் எம்மால் தாளமுடியாது. ஐயனே
என உருகி கதறி அழுவோம்.



உ

ஓம் ஐயனே! குருதேவா! நீயோ
விருப்பு வெறுப்பு அற்றவன்!
பேதம் அணுவளவும் இல்லாதவன்!
குற்றம் குறை, தப்பு தவறு, பழி பாவம்,
என எந்த உணர்ச்சிகளும் அற்றவன்!
மெய் உணர்வோடு கூடியவன்! இவைகள்,
அப்படியிருக்க, உன் குழந்தையாகிய எம்மிடம், கண்டிப்பாக இல்லவே
எப்படி இருக்கக் கூடும்? கண்டிப்பாக இல்லவே இல்லை! கண்டிப்பாக
இல்லை! கண்டிப்பாக இல்லவே இல்லை! ஆனாலும் எம்முடைய, மனமே மய,
இல்லவே இல்லை! ஆனாலும் எம்முடைய, ஜகவாழ்
பிராந்தி மயக்கத்திலும், எம்முடைய, குணங்க
தோஷ பழக்க (வாக்கு) வழக்க (செய்கை) குணங்க எம்முடைய
நிறைவு, இருப்பதாகவே மயங்கி, அங்கேயும், இருப்பதால்,
மனமோ, உன் மாயாவின், திருஷ்டியாக இருப்பதால், தெரிய
அந்த மனம், எப்படி எம்மை பற்றியது என்றும், தெரியவில்லை.
வில்லை. அது என்ன செய்கிறது? என்றும் விபரம் தெரியவில்லை.
அந்த மனம், அஹங்கார, அதிகார, அபிமான, ஆதிக்க,
உடைமை உரிமையோடு, பெயாட்டம், ஆடுவது மட்டும், தெரிகிறது.
ஓ எம் ஐயனே! ஹே பிரபோ! தயாநிதி! தயாஸாகரா!
நீ என்ன செய்வாயோ? ஏது செய்வாயோ? இந்த மனக்
குரங்கை மட்டும், நீயே வைத்துக் கொள். இம்மனக்
குரங்கால் பட்ட தொல்லைகள் போதும் ஐயனே போதும்!
இனியும் எம்மால் தாங்க முடியாது! உன்னையல்லால்,
எமக்கு கதி மோக்ஷம் ஏது? நம்பியவனை, நீ கைவிடவும்
மாட்டாய்! ஆக்குவாயோ? அழிப்பாயோ? அருள்
பாலிப்பாயோ? ஐயா! ஐயா! ஐயா! ஐயா! ஐயா!
தீன ரக்ஷகா! தீன தயாளா! தீன பந்தோ! நீயே கதி!
எல்லாம் நீயே! எல்லாம் நீயே! எல்லாம் நீயே! என
உருக்கத்துடனும், கண்ணீர் பெருக்கத்துடனும் உன்
பிரார்த்தனையை முடித்துக் கொள்!

எல்லாம் நலமே
நடை பெறும்.
சந்தேகம் வேண்டாம்! அவனே கதி!

பாபா.

① A.௨



கேள்வி:- ஸத்திய தர்மம் என்றால் என்ன? புண்ணியபாபம் என்றால் என்ன? இரண்டும் ஒன்றா? வெவ்வேறா?

பதில்:- இரண்டும் ஒன்றல்ல. இரண்டும் வெவ்வேறே! ஸத்திய தர்மம் என்பது "தெய்வநிலை"! புண்ணியபாபம் என்பது "ஜீவநிலை"! தெய்வநிலையில் பேசுவது ஸத்தியம் என்றும், செய்வது தர்மம் என்றும், ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள். ஜீவநிலையில், இப்புண்ணிய, பாபம் என இரண்டும், "இன்பதுன்பம்" எனசொல்லுவார்கள். இவை இரண்டும் "ஒன்றே" இரண்டல்ல! இவை ஓர் நாணயத்தின், இருபக்கம் போன்றதாகும்! இங்கு இன்பமே துன்பமாய் மாறும், துன்பமே இன்பமாய்மாறும். ஆனால் ஸத்தியமும், தர்மமும் நிலையில் ஒன்று "வாக்காகவும்", ஒன்று "செய்கையாகவும்" இருப்பதால், இவை இரண்டும், பிறவாநிலை யென்ற, ஜீவன்முக்திக்கு, "அடிப்படைகளாகும்"! இறை, பர, குரு உணர்வாத பேசும் போது. அவ்வாக்கை, ஒருவருக்கு,



"நீ" நன்று கொடுக்கும் போது,
பக்குவம் உள்ளவரிடம் பேசும் போது
அப்பக்குவ ஆன்மாவின், வாக்கையும்,
செய்கையையும், புனிதப் படுத்தும்.
அதாவது, சொந்த, பந்த, பாச, மென்னும் "கர்ம"
வேரடி பிணைக்காமல், தெய்வத்தோடு இணைத்து, பின்
காலக்கிரமத்தில் அது, பரத்தோடு இணைத்து விடும்!
ஆனால் "நாமரூப்பொருள்கள்!"
எதைக் கொடுத்தாலும், அது நீங்கண்டு புண்ணியத்
தையும், பாபத்தையுமே. கொடுக்கும்! அது "தர்மம்"
ஆகாது. ஆனால் அது இக்கலியில் தர்மமென்று சொல்
லப்படும்! ஆனால் அப்படி ஓர் பொருளைக் கொடுக்கும்
போது, "ஸ்ரீபகவான்" பொருள்; ஸ்ரீ
பகவானே; "ஸ்ரீபகவானுக்கு"!
கொடுக்கிறேன் என, ஸங்கல்பம் பண்ணிக்
கொடுத்தால் அது "தர்மமாக" மாற
வழியுண்டு என, ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்.
ஆனால் இக்கலியில், அவ்வாறு செய்வது,
இயலாத காரியமே! காரணம் விஷயவாஸனையே!

உ



மேலும் பலன் கருதாமல் எதையும்
கொடுப்பதும் இல்லை வாங்குவதும் இல்லை.

கேள்வி:— ஸ்ரீமத் பகவத் கீதையில்,
ஸ்ரீ பகவான் சொல்லும் வாசகமாவது:—

ஹே பார்த்தா! தர்மம் க்ஷீணித்து (அல்ல அல்ல மறைந்து)
(தர்மம் கெட்டு) அதர்மம் மேலோங்கும்
போதெல்லாம், யாம் எம்மை, தோற்று
வித்துக் கொள்கிறோம் என சொல்வதாக ஓர் ஸ்லோ
கம் வருகிறதே. இதன் தாத்பர்யம் என்ன?

A. தர்மம் கெடும் என்றால், நீங்கள் சொல்லும், ஸத்
திய தர்ம விளக்கம் சரியில்லையே?

B. அதர்மத்தை அழித்து, ஸத்திய தர்மத்தை, நிலை நிறுத்து
கிறாரா? அதர்மத்தை அழியாமலே, ஸ்தாபனம் செய்கிறாரா?

C. அழியும் அதர்மம், திரும்பவும், தோன்ற காரணம் என்ன?
ஸ்தாபனமான ஸத்தியதர்மம், திரும்பவும் வீழ்ச்சியோ,
மறைவோ, ஆக காரணம் என்ன?

D. இப்படியே, ஒவ்வொரு முறையும், தர்மத்தை
காப்பாற்ற, நிலைநிறுத்த, ஸ்ரீ பகவான் தோன்றியும் அது
நிலை இல்லாமல் போகிறதே; இங்கு ஸ்ரீ பகவானுக்கு,
திறமை இல்லை என்றா பொருள்? உலகமும், அதைச்
சார்ந்த, ஸத்திய தர்மமும், நிலையில்லாதது என்பதாலா?

பதில்:— குழந்தாய்! இக் கேள்விகள், அதிக பயன் உள்
ளதே. இனி கவனமாக கேள்?
முதலில் இந்த ஓர் உண்மையை, உன் உள்ளத்தில்,
ஆழமாகப், பதிவு செய்து கொள்ள வேண்டும்!



உ

நாமரூப ஜகம், நிலையில்லாததே!
ஆனாலும், இன்று உன் கண்களுக்கு,
ஸத்தியமாய் நித்தியமாய், இரும்பு
டையது போல், தோன்றுவதால். வாக்கிய
விளக்கத்திற்காக, இவ்வுலகம்,
உண்டு என வைத்துக்கொள்வோம்!

பொய்க்கு பொய்யான விளக்கம்
அவசியம் தேவைதான் உலகம் விளக்கம்
என்றும், நாமரூப கற்பனை சொரூப இறைவன்,
தெய்வீகம் என்றும், நாமரூப கற்பனை கடந்த,
காலாதீதபர சொரூபம், பரமார்த்திகம் என்றும்;
ஸ்ரீமஹான்களால், வகுத்து வைக்கப்பட்டிருக்கிறது.
அங்கு விளக்கத்திற்கு புண்ணியபாவம்
உண்டு எனக் கொள்க! தெய்வீகத்திற்கு,
ஸத்திய தர்மம் உண்டு எனக் கொள்க.
ஆனால் பரமார்த்திகத்திற்கு, எந்த தர்மா
தர்மங்களும் இல்லவே இல்லை.
என்பதே ஸத்தியம். இங்கு புண்ணிய பாவங்கள் இரண்டுமே கோர
குணதோஷ சம்பந்தம் கொண்டவையாகும்.



அவை அழிவனவாகும்! ஆனால்
ஸத்தியம், தர்மம் இவ்விரண்டும் தெய்
வீகநிலையால், "ஸத்வகுண"
சம்பந்தம் கொண்டதாலும், பரமார்த்திகத்திற்கு
நெறிச் செல்லும், "படிக்கட்டுகளாக"
இருப்பதாலும், அவை நற்காவித "உண்மை"
யென்று பிரகாசிக்கும் (அவை ஸாஸ்வதமுமல்ல,
நிரந்தரமுமல்ல) ஆகவே இங்கு உன் கேள்வியின்
படி, "ஸத்தியதர்மம்" அழிவ
தும் இல்லை! அழிக்கவும் முடியாது!
இதை எப்படி உணர வேண்டும் என்றால்? மாரி (மழை)
காலங்களில், கருமேகம், எப்படி சூரியனை மறைத்து,
[காரிருள் உண்டு பண்ணி]
↑சூரியனை இல்லாத நிலைக்கு, செய்ய முடிகிறதோ,
அந்த நிலையில், ஸத்தியதர்மத்தை, "அதர்
(ஸூர்ய பிரகாசமான)
மம்"! என்ற, துணை தோஷங்கள், மறைத்துதான்
செய்யும். அதை ஸ்ரீபகவான், ஓர் அவதாரம் எடுத்து,
(மேகக்கூட்டங்களை, காற்று அடித்து, சிதறடிப்பது போல்)
அதர்மத்தை நிர்மூலமாக்கி தர்மத்தை நிலை நிறுத்துகிறான்
எனப் பொருள் கொள்ள வேண்டும்.



உ

ஆனால், உலக நிலையில் புண்ணிய பாபம் இரண்டும், இணைந்ததே "தோஷ குணம்" என்னும் அதர்மமாகும்!

தெய்வீக நிலையில், ஸத்திய தர்மம், இவை இரண்டும், இணைந்ததே, சாந்தி, அமைதி, அன்பு, ஆனந்தம் நிறைந்த "ஸத்வகுணம்" என்னும் தர்மமாகும்!

A. தர்மம் கெடும் என்றால், நீங்கள் சொல்லும், ஸத்திய தர்ம விளக்கம் சரியில்லையே?

பதில்:- தர்மம் கெடாது. அதை எதுவும் கெடுக்கவும் முடியாது. தர்மம் இல்லையென்றால், லௌகீகம் என்ற, "நாமரூப" உலகமும், தெய்வீக நிலையில் உள்ள, தேவ தெய்வங்களும், அதைச்சார்ந்த, "பக்தி முக்தி" யெனச் சொல்லும், லோகாந்திரப் பிராப்திகளும், இல்லையென்றே சொல்லலாம். ஆகவே, தர்மம் அதர்மத்தால், "மறைக்கப்படும்"! இறை ஆற்றல், அம்மறைப்பை விலக்கி, பிரகாசிக்கப்பண்ணும் (முன்பு சொன்னபடி)

B. ஸ்ரீபகவான், அதர்மத்தை அழித்து, ஸத்திய தர்மத்தை, நிலை நிறுத்துகிறாரா? அதர்மத்தை அழிக்காமலேயே, தர்மத்தை ஸ்தாபிக்கிறாரா?



பதில் :— இதில் ஓர் உண்மை என்னவென்றால்.
"அதர்மம்" என்பது ஓர் இருள் ஆகும். "தர்மம்" என்பது ஓர் ஒளி ஆகும். (இறைவாக்கிய விளக்கமே)

ஒளி வந்ததும், இருள் தானே ஓடி விடும்! (நசுக்கும்)

இருள் கௌவியதும், ஒளி மறையும் (அழிவதில்லை)

மேலும், தர்மம் என்பது, எந்த "உபாதையும்" இல்லாததாகும். "தானும்" கெடாது! "பிறரையும்" கெடுக்காது. ஓட்டி விடும் என்று சொல்வதை விட, தர்மத்தின் முன் அதர்மம் நில்லாது ஓடிவிட வேண்டும். இதுவே நியதி! ஆனால் தர்மத்தை அதர்மம் மறைத்ததே என்றால், அது "மாயையின்" சாமர்த்தியமாகும். மேலும் அந்த மாயையில் தோன்றிய உன் "மனதின்!" மயக்க பாவனையுமாகும்!

கே. அழியும் அதர்மம் திரும்பவும் தோன்றக் காரணம் என்ன? ஸ்தாவனமான, ஸத்திய தர்மம் திரும்பவும் வீழ்ச்சியோ, மறைவோ, அதக் காரணம் என்ன?

பதில் :— உலகமும், அதன் காட்சிகளும், நிகழ்ச்சிகளும், அந்த "நான்கு யுகங்களுக்கும்!"



திட்டமிட்டு தயாரிக்கப்பட்ட ஓர் "மாயா திரைக்" காட்சியாகும்.

இக்காட்சியின் "அதியதிபரம்" ஆகும்!

அது செயல்படாத்தன்மையறல், செயல்படும் நிலையில் ஈஸ்வராதி "கர்த்தாக்களே" டைரக்ஷன் ஆகும்!

எங்கும் பரவி, அனைத்தும் ஒழுங்காக இயங்கும், அனைத்து "கோள்களும்" உலகங்களும், நாடக மேடை ஆகும்!

"சம்பளம்" இல்லாமல் நடித்து, ஊதியத்திற்காக, தாங்கள் தம், மனதின் ஸ்வமாக தாமே சேமித்த, "புண்ணிய பாப" கர்மாக்களை, அனுபவிக்கும் ஏழைதரான அனைத்து "ஜீவகோடிகளும்" நடிகர்களாகும்.

இந்த நடிகர்கள் அனைவரும் "ஏமாழிகள்" ஆகும்!

இவர்கள் அனைவரும், (ஜீவர்கள்) "மாற்றத்தினால் தடுமாறு" (காரணம் மனம் ஆகும்) "ஏமாந்தவர்களாகும்!"

எவர்க்கும்

இது திட்டமிட்டு ஓர் காரியமாக இருப்பதால், வீழ்ச்சியோ, அழிவோ, ஐயப்போ, முக்காலமும் எக்காலமும் இல்லை!



D. இப்படியே ஒவ்வொரு முறையும், தர்மத்தை காப்பாற்றி, நிலைநிறுத்த ஸ்ரீபகவான் தோன்றியும், அது நிலையில்லாமல் போகிறதே! இங்கு ஸ்ரீ பகவானுக்கு திறமை இல்லையா? அல்லது உலகமும், அதைச்சார்ந்த, ஸத்திய தர்மமும், "நிலையில்லாதது" எனப் பொருளா?

பதில் :— இங்கு "அறிவு" பூர்வமாக, உணர்ந்து நோக்கினால், "மாயைக்கும் & அவித்தைக்கும்" நடைபெறும், ஓர் வேதமாயாவின், விளையாட்டு காரியமாகும். இவ்விளையாட்டை, "ராஸிக்கும் ராஸிகன்" உன்னுடைய "மாயாமனம்" ஆகும்!

இதை தெய்வநிலையில் (சாட்சி பாவனையில்) விளக்குவது என்றால்? அதன் (பரம்) அம்சமாகிய, ஸ்ரீபகவான் தம் அம்சமாகிய, குழந்தைகளிடம் (மாயையும், அவித்தையும்) "கண்ணாமூச்சி" (கண்கட்டி விளையாடுதல்) விளையாடுகிறான்.

இது விளையாட்டே தவிர, வினையம் (வினை) இல்லை. ஆனால் இந்தமனம், எண்ணாத பாவனை பண்ணி, வினை ஆக்கிக் கொள்கிறது!



உ

எப்படியென்றால்? ஸ்ரீபகவான், ஓர் தொழில் "ஸ்ருஷ்டி, ஸ்திதி சம்ஹார கர்த்தாவாகும். அவன் "ஜீவன் முக்திக்கு" வழி தேடவேண்டியவன் இல்லை. அவன் "நித்திய முக்தனே" இருக்கிறான்.

அந்த முத்தொழிலையும், அநாயாசமாக, ஓர் விளையாட்டார்த்தமாக செய்து வருகிறான். மேலும், "ஓய்வில்லாமல்" உழைக்கக் கூடியவன். அவ்வுழைப்பு அவன்மாயாவாகும்.

இவன் உலகையும், ஜீவர்களையும், பராமரிக்கும் நிலையில், அதர்மத்தை அழித்து, தர்மத்தை பாதுகாக்கும் நிலையில், பலகாலங்களில், பல நிலைகளில், பல வேஷம் தரித்து, "அவதாரம்" செய்கிறான். இவன் எப்போது, "அதர்ம அழிவோ", "தர்ம ஸ்தாபனமோ" செய்த நிலையில்,



"அதர்மம்" தோன்றாமலும்,
"தர்மம்" மறையாமலும் இருந்தால்,

ஸ்ரீ பகவான் பண்ணியது நிலைத்து நின்றால்?

# "ஸ்ரீ பகவானுக்கு வேலை ஏது??"

(அவனுக்கே, வேலையில்லா திண்டாட்டம், உண்டாகிவிடும்.)

## "ஆகவே?"

தர்மத்தை நிலைத்து நிற்பதைப் "போல்" நிற்க வைப்போம். என்றும், அது சாய்வதைப் "போல்" ஆட்டம் சாயுமென்றும், அது சமயம் அதர்மம் மேலோங்கி போடுகிறது "போல்" ஓர் போக்கை (நம்மாயையால்) காட்டி, யாமும் அதன் நிமித்தம், அவதாரம் செய்வதைப் "போல்" ஓர் நாடகம் நடத்தி, உங்கள் மன மடமையால், நம்புவதைப் "போல்" ஒரு சில, "புராணக் (பொய்க்)" கதைகளையும், சொல்வதைப் "போல்" சொல்லி, உங்களை மயக்கி, அவன் விளையாடுவதைப் "போல்" விளையாடிக் கொண்டிருக்கிறான்.



நீங்கள் அனைவரும், "மனம்"! வசப்பட்ட தன்மையால், அதை விளையாட்டென உணராமல், அவன் மாயா மாற்றத்தில், ஏமாறி தடுமாறி எதிர்பார்ப்பால் உண்மையென நம்பி, ஸ்ரீ பகவான் செய்யும் காரியம், "பழுதாகிவிடுகிறதே" என குழம்புகிறீர்கள். அங்கு அவன் நடத்தும், நாடகம் பழுதும் இல்லை! பாரம்பும் இல்லை! பாபமும் இல்லை! மேலும், ஸ்ரீ பகவான் காரியமானது:- துஷ்ட நிக்ரகம், (துஷ்டர்களை சம்ஹாரிப்பது) என்றும்; இஷ்ட ஜன பரிபாலனம் (இஷ்டர்களை பரிபாலிப்பது) என்றும் பேசப்படுகிறது. அதன் விசேஷ தன்மை, என்னவென்றால்? இதை உணர்க!

ஸாந்தி

ஸத்வகுணம் எனச் சொல்லும், அன்பு, பொறுமை, கருணையோடு கூடிய, "சாந்தகுணம்"! "துர்க்குணங்கள்"! அழிக்காது. அழிக்கவும் கூடாது! அழிக்க முடியாது! அதன்



உ

இயல்பான தன்மை, என்னவென்றால்? "ரசிப்பே" தவிர சிரிப்பும் (அழுப்பும்) இல்லை! பசிப்பும் இல்லை! அதைப் போலவே, துர்க்குணம்! ஸத்வ குணத்தை, நெருங்கவே முடியாது! தொடமுடியாத் தன்மையால், அதை அழிக்க முடியாது. "ஸத்வகுணம்" என்றால், ரசிப்பே! ரஜோ தமோ குண சம்பந்த "துர்க்குணம்" என்றால்; கண்டிப்பு, தண்டிப்பு, சிரிப்பு, பசிப்பு, இவைகளுடன் கூடியதாகும். மேலே கூறியவைகள், அனைத்தும் குண சம்பந்தம் ஆகும்! ஆகவே பாரதப் போரில், எம் கண்ணன், செய்த. தெல்லாம், கர்மம், கபடம், சூழ்ச்சி, வஞ்சகம், போட்டி, விரோதகுரோதம் பொறாமை, என்னும், துர்க்குணங்கள், எங்கெங்கெல்லாம் தோன்றிற்றோ, அங்கங்கெல்லாம், தானும் அக் "குணங்கள்"! பிரயோகித்து, அவ்விரண்டையும், மோதச் செய்து, அவ்விரண்டையுமே அழித்து விட்டு, தான் எதிலும் பற்றப்படாமல், ஆனந்த பரதக இருப்பான். இதுவே ஸ்ரீ பகவானின் ரகஸ்யமாகும்!



அந்த "**குணங்களும்**" "**வினை**"! சம்பந்தம் ஆகும். அவ் வினைகளின் மொத்த வடிவமே, பஞ்சீகிர்தம் பண்ணப்பட்ட, "**தூல உடல்**"! ஆகும்! அவ் வினையென்பது, புண்ணிய பாபமாகும்! புண்ணிய பாப சொரூபமே உடலாகும்! ஆகவே குணம் என்றால், எண்ணமாகும். எண்ணங்களின் இயக்கமே உடலாகும். இதைத்தான், ஓர் அன்பர் பாடும் போது :- வினைப்போகமே, ஓர் தேகம் கண்டாய் என்றும், வினை தான் ஒழிந்தால், தினைப்போதும், (ஒரு பிறவியும்) நில்லாது கண்டாய் என்றார். இதிலிருந்து, ஓர் உண்மை, எப்படி விளங்குகிறது என்றால்? புண்ணிய பாபம், உடல் என்றும், அது லௌகீகம் என்றும், ஸத்திய தர்மம் ஸத்வகுணம் என்றும். அது தெய்வீகம் என்றும். முதலில் உணர வேண்டும். "**பரம்**" என்றால் நிர்க்குணம்! "**தெய்வீகம்**" என்றால் ஸத்வகுணம்! "**உடல் உலகம்**" என்றால், அது "**லௌகீகம்**" என்றும், அது துர்க்குணம் என்றும் அறிய வேண்டும்.



உ

மேலே சொன்ன நிலையில், உணரும் போது
துர்க்குணங்கள் மோதி அழிந்தால், அதனால்
உண்டான, "வினைகள்" அழிந்தே
ஆகவேண்டும்! வினைகள் அழியும் போது,
வினைகளின் மொத்த உருவமான, "உடல்கள்"
அழிந்தே ஆகவேண்டும் இந்த நிலையில் தான்?
ஸ்ரீபகவான் அவதாரம் எனச் சொல்லும் போது,
"எந்தெந்த" குணங்கள் தலை விரித்தாடுகிறதோ,
"அந்தந்த" குணங்களை, அங்கங்கே, மோதச்
செய்து, அங்கே இருந்த குணங்களையும், தாம்
மாயையால் சிருஷ்டித்த, அதே குணங்களையும், மோதச்
செய்து, அக்குணங்கள் என்ன "வினை" சம்பந்தம்
கொண்டிருந்ததோ, அவ்வினை சம்பந்த "பாபங்
களையும்"! அழித்து; "அவ்விரு" குணங்களை
யும் (இருந்த குணம், வந்த குணம்) மோதி அழிவதை



நாம் "நடுநாயகனைக்" (சாட்சியாய்) இருந்து கொண்டு, பாரபக்ஷ தோஷம் இல்லாமல், "ஆனந்தமாய்" (அறிவு சொரூபமாய்) "எல்லாம் நலமே"/ நடைபெறுகிறதென, மெய்யுணர்வு நிலையிலிருக்கிறேன் எம்பிரபு! இதை அந்நிலையில் உணராமல், தோஷ குண கண் கருடன் நோக்கும், "அபக்ஷவி" கருக்கு, குற்றம் குறையாக, தோற்றுவது சகஜமே!

ஓர் அன்பர் பாடல்:— உலகம் யாவையும் "தாம் உளவாக்கலும் (உண்டு பண்ணியும்) நிலைபெறுத்தலும், (அதை ரக்ஷித்தலும்) நீக்கலும் (மாற்றம், மறைவு) நீங்கிலா (இடைவிடாமல்) அலகிலா விளையாட்டை"/ உடையவர் (எவரோ) அவர் திருவடிகளை சரண் அடைகிறோம் என்றார்.

1. விருப்பு வெறுப்பற்ற, ஸ்ரீ பகவானுக்கு விளையாட்டு!
2. எனது என பந்தப்பட்ட மனதுக்கு, கரும அவஸ்தை!!
3. எல்லாம் நீயே என, விட்டவனுக்கு ஒரே ஆனந்தமே!!!

உ



## 1 B.

கேள்வி:- புண்ணிய பாபத்திற்கும், ஸத்திய தர்மத்திற்கும் என்ன வித்தியாசம்?
B. இவ்விரண்டும் எப்படி நடைபெற வேண்டும்? ஆனால் இன்று, எவ்வாறு நடைபெறுகிறது?
C. இவ்விரண்டில், ஜீவன்முக்திக்கு வழி என்ன?

பதில்:- A. புண்ணியபாபம், "பிறவியின்" வித்து ஆகும்! அது இன்ப துன்பத்தால், பிணைக்கப்பட்டதாகும். இன்பதுன்பம் என்றுவே, அவை சுவையின், "குணங்களில்" இனிப்பும் காரமும், ஆகும். இந்த சுவையின், இனிப்பும் காரமும், முறையே "ஆசையும், கோபமும்" என்று வடிவெடுத்து, அது மேலும் மேலும், விருத்தி அடையும்போது, "மோஹமும் காமமும்" & ஆக்ரோஷமான "விரோத குரோதம்" என்றும், வடிவெடுத்து, அனைத்து துர்க்குணங்களையும், உண்டுபண்ணத்தக்க ஓர், "மாயா பீஜமாகும்" ஆகவே, இப்புண்ணிய பாபம் இரண்டும் "விஷத்தன்மை"யென, அனுபவ ஞானிகளாகிய "இல்லற ஞானிகள்" கூறுவர்.



உ

ஸத்திய தர்மத்திற்கு பல இடங்களிலும், பல நிலைகளிலும், விளக்கம் கொடுத்திருக்கிறேன். இவ்விரண்டும், "தெய்வீக" அம்சம் பெற்றிருப்பதால், ஸத்வகுண சம்பன்னராய், ஆக்கிக்கொண்டு அந்த சாதனை, மேல் நோக்கி, கொண்டு செல்லும் "படிகளாக" மாறி, அன்பு, கருணை, சாந்தி, அமைதி, ஆனந்தம், இவைகளுடன், நாம் "அடங்கும்" நிலையை, உணர்ந்து வருவதாகும்.

B. இவ்விரண்டும், எப்படி நடைபெற வேண்டும்? ஆனால் இன்று, எவ்வாறு நடைபெறுகிறது?

பதில்:— யுகயுக தர்மப்படி, ஸத்தியம் பேச வேண்டும். தர்மம் செய்ய வேண்டும்! ஆனால், இன்றைய கலியுக நேரெதிர்ப்படி, "ஸத்தியம்" செய்யப்படுகிறது. "தர்மம்" பேசப்படுகிறது. இது கலியுக நியதி என்ற "விதி" ஆகும்! இதை இக்கலியுகம், மறையும் பாரியந்தம், "பெருமாளும்" (இறைவனே ஆனாலும்) மாற்றவோ, மறைக்கவோ, விலக்கவோ, முடியாத ஒன்றாகும். இதன் விவரத்தை, கலியுக தர்மம் என்ற நூலில் காண்க!



உ

கே. இவ்விரண்டினுள், ஜீவன்முக்திக்கு வழி என்ன?

பதில்:— புண்ணிய பாவங்கள், பிறவிக்கு வித்தே தவிர, ஜீவன்முக்தி இல்லவே இல்லை. ஆனால் புண்ணியம் என்று சொல்லக் கூடிய ஒன்றுமட்டும் மனிதப் பிறவியில் "மேலான பிறவி" பெற வாய்ப்பு உண்டு. மேலும் புண்ணியம் அதிகமானால், "சொர்க்காதி" பத்யங்கள், கிடைக்க வாய்ப்பு உண்டு. அதனினும் "பக்தியுடன்" கலந்த புண்ணியம் அதிகமானால், "பதமுக்தி" என சொல்லக் கூடிய, கைலாயம், வைகுண்டம், என சொல்லக் கூடிய லோகாந்திர பிராப்தி, பெறவும் வாய்ப்பு உண்டு.

மேலும் தன்னலம் கருதாத நிலையில், ஸ்ரீ பகவத் அர்ப்பணமாக, செய்யும் புண்ணியம், மேலிட்டால் அதுவே, காலக்கிரமத்தில் "தர்மமாக" மாறவும் வாய்ப்பு உண்டு. இத்தர்மபலத்தினாலும், இறைவன் திருவருளாலும், இவனுடைய சிரத்தையினாலும்,



"ஸத்குரு" தர்ஸனமும், அவர் க்ருபையை, பரிபூரணமாக பெற்று விட்டால் அவஸ்யம், "ஜீவன் முக்தி" உண்டு என, ஸ்ரீ மஹான்கள் சொல்வார்கள். இதை சாஸ்திரம் எப்படி, சொல்கிறதென்றால்?

"பலகோடி ஜன்மசுக்ருதம்!" (பலகோடி ஜன்மாக்களில், தேடிய புண்ணியங்கள்) சேர்ந்து, ஒட்டு மொத்தமாக, கிடைக்கல், அவனுக்கு அவஸ்யம் "ஸத்குரு" தர்ஸனமும், க்ருபையும், பெற்று ஜீவன் முக்தி, பெற வாய்ப்பு உண்டு!

இங்கு ஓர் உண்மை, என்னவென்றால்? பலன் கருதாத "புண்ணியம்; தர்மமாக"! மாறினாலன்றி, ஸத்குரு க்ருபையும், ஜீவன் முக்தியும், பெற முடியாது என்பதே, ஸ்ரீ மஹான்களின் அனுபவம்!

"புண்ணியம் தர்மமாக" மாறும் நிலையாவது? — இங்கு தான், யாம் முன்பு கூறிய, ஸத்திய தர்மம், கை கொடுக்கும். என உணர வேண்டும்!



உ

புண்ணியம் தர்மமாக, எப்படி மாறும் என்றால்? உணவோ, உடையோ, பணமோ, பொருளோ, ஒருவர்க்கு கொடுக்கும் போது

1. இவைகளை வாங்குபவன், கூடா, திருடனா, மூடனா, ஆணா, பெண்ணா என "தராதரம்" பார்க்கவாகாது.

2. இறைகுரு உணர்வோடு இருக்கும் போது, நீ கொடுக்கும் பொருள்; ஒன்று "முன்கணக்கு" முடியவாம். முன்கணக்கு இல்லாமலும், இனி (பின்) கணக்கு தொடராமலும், இருக்கும் நிலைக்கு, இவ்விருகணக்கையும், "சாட்சி"யாய் நடத்தும், ஸ்ரீபகவானுக்கு உன்னை எப்படி நடத்த வேண்டுமோ, அப்படி நடத்த திறமை உண்டு!

3. நீ செய்ய வேண்டியதெல்லாம், ஸ்ரீபகவத் உணர்வோடு, "ஸ்ரீபகவான்" பொருள்; "ஸ்ரீபகவானுக்கு, கொடுக்கிறேன்!" என்ற, இறையுணர்வோடு, கொடுக்க வேண்டும். இங்கு நீ கொடுக்கிறேன் என, "பண்மையாக"/ கொடுப்பதால், ஸ்ரீபகவானையும், உன்னோடு இணைத்துக் கொள்கிறாய். என உணர வேண்டும். ஆகவே இங்கு கர்மா தொடரவில்லை. இங்கு கர்மா நிறைவு பெறுகிறது.



உ

4. தர்ம ஸ்தாபனங்களோ, பொது ஸ்தாபனங்களோ, அங்கு நீ கொடுக்கும் பொருளுக்கு, உன் முகவரி, இல்லாமல், கொடுப்பதே தர்மமாகும்!

முகவரியோடு கொடுத்தால், அது புண்ணியம் ஆகும்.

அங்கு நீ, கொடுக்கும் பொருள் "அஸத்தான" காரியத்திற்கு, பயன்படுத்தப்பட்டால், (நீ முகவரியோடு) கொடுத்த தன்மையால், அதுவே "பாபமாக" மாற வாய்ப்பும் உண்டு.

(இதைத்தான் ஸ்ரீமஹான்கள், தன் அநுபவத்தில் கூறும்போது, ஒரு கை கொடுப்பது, மறு கைக்கு தெரியாமல், கொடுக்க வேண்டும் என்றார்கள்.)

5. கொடுக்கும் பொருள் வியாபாரமாகவோ, (எதிர்பார்த்தவோ,) விளம்பரமாகவோ, (பிறர் புகழும் நிலையிலோ,) ஆடம்பரமாகவோ, (வீண் டம்பமாகவோ,) அமையக்கூடாது. இப்படி கொடுத்தாலும், அது தர்மமாகாது. அது புண்ணிய பாபங்களை, உன்மை நீங்கண்டு, கொடுக்கும் என ஸ்ரீமஹான்கள் சொல்வார்கள்.



உ

இங்கு ஸத்திய தர்மம், எப்படி விளங்கும் என்றால்?

6. பொருளைக் கொடுக்கும் நியதியால், மேலே சொன்ன நியதியால் "ஸ்ரீபகவன் நாமஸ்மரணையோடு"! செய்வது, அவஸ்யம் தர்மமாகுமாறும்!

"ஆனால் ஓர் உண்மை என்னவென்றால்! பொருள் அனைத்தும், நாமரூப குண" சம்பந்தமாகும்! அவைகள், வந்து, இருந்து, மாறி, மறையக்கூடியவைகளாகும்!

ஆனால் "வாக்கு"! ஒலி அலைகளாக மாறி, அவைகள் நான்கு யுகங்களுக்கும், "ஸூக்ஷ்மமாய்" பிரகாசிக்கும்.

ஆகவே, நிலை கண்டு, (ஓர் பக்குவ ஆன்மாவின் வாக்கை அறிந்து) செயல் கண்டு (ஓர் பக்குவ ஆன்மாவின், நடை உடை பாவனை கண்டு) "இதமாகவும்" (இனிமையாகவும்) "மிதமாகவும்" (குறைவாகவும்) "இறைகுரு" உணர்வோடு, (எல்லாம் அவன் பொருளே! எல்லாம் அவன் செயலே! அவனன்றி அணுவும் அசையாது என்ற நியதியில்) ஓர் பக்குவ ஆன்மாவிடம், "வாக்கு" தொடுத்து உரையாடுவது



உ

"ஸத்திய வாக்கை, "தர்மம் செய்யும்"!!!

நியாயமும். இதை ஏன் இப்படி சொல்கிறேன் என்றால் "பொருள்" என்றால் நாமரூப சம்பந்தம் கொண்டதாகும் அவை வந்து, இருந்து, மாறி மறையக்கூடியன! அவைகள் நிலையில்லாதது! அவைகள் நிலை பக்குவம் அறிந்து, புண்ணியம் முதலில் தந்து, பின் தர்மமாக மாறக்கூடியது! ஆனால் வாக்கு, முக்காலமும், எக்காலமும், இருக்கக் கூடியதாக இருப்பதாலும், நேரடியாக தர்மத்தைக் கொடுப்பதாலும், அவ்வாக்கே, ஜீவன் முக்தியின், முதல் "அஸ்திவாரமாக" இருப்பதாலும், "வாக்கே அனந்தமாக" இருப்பதாலும், ஸத்திய வாக்கே தர்மமாக மாறுவதாலும், "பொருள் தர்மத்தைவிட", "வாக்கு தர்மம்" அதிக சிறந்ததானது, ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள்.

இங்கு ஸத்திய வாக்கே, தர்மமாகி செயல்படுவதால், அதுவே ஜீவன் முக்திக்கு உரியதாகிறது!

உ



## 1. கே.

கேள்வி:— தாங்கள் எழுதிய, ஓர் புஸ்தகத்தில், ஸ்ரீபகவான் சொல்வதாவது:— (ஓர் பக்தனைப் பார்த்து) குழந்தாய்! நீ உன் பூர்வபுண்ணியத்தாலும், உன் சிரத்தையினாலும், உன் ஸ்ரீ ஸத்குரு கருணையினாலும், ஜீவன் முக்தி அடைந்து விடுகிறாய்! ஆனால் "யாம்" "ஸ்ரீபகவானை" இருந்து, என்ன பிரயோஜனம்? "48" சதுர்யுகம், முடிந்தால்லவோ, கர்த்தாக்களாகிய (பிரம்மா, விஷ்ணு, சிவன்) எங்களுக்கு முக்தி என, சலித்துக் கொள்வதாக ஓர் வாசகம் வருகிறதே? இதன் "உள்ளே!" அனேக கருத்துக்கள், இருப்பதாக உணர்கிறேன். அவைகள் சற்று சுருக்கமாக விளக்க வேண்டுமென்று, பணிவுடன் வேண்டுகிறேன்?

பதில்:— இதை அவஸ்யம், தெளிவு பெற வேண்டியது தான்! முதலில் இதை கவனிக்கவும்!

1. மனம் படைத்த மனிதனுக்கு, "மண்ணும் ஜலமும்!" பிசைந்து வார்த்தெடுத்த ஓர், புண்ணிய பாப சம்பந்தம் கொண்ட, "ஓர் வினை உடல்!"
2. இவைகள் ஒழுங்காக, பாரபக்ஷ தோஷமில்லாமல், இயக்கும் ஸ்ரீபகவானுக்கு, "ஒளி உடல்!" அதாவது ஜோதி வடிவான, "அக்னி" சரீரமாகும்!



உ

அக்கினியானது, குறிப்பிட்ட காலங்களில், குறிப்பிட்ட இடங்களில், "காரண காரிய" நிமித்தம் தோன்றும். பின் அது முடிந்தவுடன், தாமே மறைந்துவிடும்!

ஆகவே ஸ்ரீபகவானுக்கு, "அக்கினி" அதாவது, "ஜோதி" சரீரம் என, கொள்ள வேண்டும்! ஆகவே தான் ஸ்ரீபகவான், திடீர் எனத் தோன்றுவான்! திடீர் என மறைவான்!!

நமக்குள்ளே, ஸ்ரீ பகவான், வாசம் செய்கிறான் என்பதை, சரீர உஷ்ணத்தை வைத்தே, தெரிந்து கொள்ளலாம். சரீர உஷ்ணம் இருந்தால் சிவம்! உஷ்ணம் மறைந்தால் அது சவம்! எனபெயர் பெற்று விடுகிறது.

3. வாயுவை ஸ்தம்பனம் பண்ணி, அதை மேலே எழுப்பி, "சகஸ்ராரம்" வரை கொண்டு சென்று, மேலும் அவ்வாயுவை தலைமேலுள்ள, ஒவ்வொரு ரோமத்துவாரங்களிலும் உள்ள, "ஓட்டைகள்" வழியாக, மேலே 18 அங்குலம் சென்று, "பரவாசுதேவன்!" என்ற நிலையைப் பெற்று, வாயுவையும்; ஆகாயத்தோடு! கலந்து விட்ட மஹா யோக புருஷர்களின் சரீரம் "வாயு" ஆகும்!



உ

வாயுவோடு போராடி, வாயுவை வென்று கொண்டு, (உடலில் உள்ள தொண்ணூற்றி ஆறு தேவர்களையும், அடக்கி வென்றி கண்ட)

"யோகிகளே", "சித்தர்கள்" ஆவர்.

யோகிகளுக்கு, திரிகர்த்தாக்களையொத்த "சக்தி" கிடைக்கும். {இவர்கள் நான் வென்றேன் என்றும், என்றும் நான் அறிந்தது என்றும், அஹங்கார, அதிகாரத்தால் வென்றதைத்} திரிகர்த்தாக்களுக்கும், "அந்தமான மஹாசக்திகளான", "அஷ்டசித்திகளும்" கைவரப் பெற்றவர்களே, சித்தபுருஷர்களாகும். குறிப்பாக!

சகஸ்ராரம் வரை, சென்றவர்களை, யோகிகள் என்றும், சகஸ்ராரத்திலும் மேலே, 18 அங்குலம் சென்று, ஆகாயம் என்ற (பரநிலையை எட்டியவர்களை) சித்தர்கள் என, ஸ்ரீ மஹான்கள் சொல்வதுண்டு.

குறிப்பு: இவர்கள் பரநிலையை எட்டியவர்களே யல்லாமல், பரநிலையை "தொட்டவர்களும்" இல்லை! அதை உணர்ந்தவர்களும் இல்லை. காரணம்?



ஆழ்ந்து கரைந்த "பக்தியோ"!
தன்னை உணர்ந்த "ஞானமோ"!
"மண்", "பொன்", "பெண்",
என்ற இந்த, மூவாசையையும், முழுமையாக, கெடுத்தவர்களுக்கே, மேலே சொன்ன இரண்டும் சாத்தியமாகும். மேலும் "நான்", "எனது", "என்னுடையது" என்ற, அஹங்காரம், அதிகாரம், அபிமானம், இம்மூன்றும், "சிறிது" தெரியாமல், அழிந்தும் இருக்க வேண்டும்! ஆனால் ???????

இந்த யோகிகளும், சித்தர்களும், வாயுவோடு போராடி; வாயுவை ஜயித்து; "வாயு சொரூபமாகவே" ஆனதன்மையானால், காற்றைப் போல், அசைக்கும் தன்மையும் போவதில்லை! நான், என்றல் என்ற அஹங்காரமும் அதிகாரமும் "ருத்ராவேசமான" கோபக்கனலும், இவர்களிடம், மேலும் மேலும் அதிகமாகுமே தவிர குறைவதில்லை!



உ

ஆனால் அவ்விருவரிடமும், "ஆசை"யும்! "அபிமானமும்!
அறவே இருப்பதில்லை. அவ்விருவரும்
வாயுவின் "அசுரசக்தியை"
மட்டும், வைத்துக் கொண்டு, மண்ணிலும் ஜலத்திலும்,
உள்ள, ஆசைகளையும், அபிமானங்களையும், விட்டவர்
களே! இந்திரர்களும், யோகிகளும், திரிகர்த்தாக்களை
வேண்டி, தபஸ் செய்யவும் தேவையில்லை. அவர்களி
டம், வரம் வாங்கி, சக்திகளையும், பெறவேண்டியதில்லை.
வாயுவை அடக்கி, ஆயித்த தன்மையால், அவ்
"வாயுவே!" அடங்கிய, 96 தேவர்களும்,
இவர்கள் கைவசம் ஆன தன்மையால், இவர்களுக்கு
"அசுரசக்தியை" விட, அதிக ஆற்றலும்,
பலமும், ஆதிக்க வெறியும், சர்வசாதாரணமாக உண்டு.
ஆனால் இவ்விருவருக்கும், ருத்ராவேசம் என்ற கோபக்கனல்
இருக்கும் தன்மையால், இவர்கள் "மனம்" அடங்கி
இருக்கிறதே யன்றி, மனம் அழியவில்லை. ஆகவே
இவர்களிடம், சொல்லி விளக்க வொண்ணா "பயம்!"
உண்டு. இவர்களுக்கு, மனம் இருக்கிறபடியால்,



"வினையும் உண்டு"

"ஜன்மாவும் உண்டு"

ஆசையும், மனமும் வினையும், ஜன்மா கொடுக்கும், விதியும் இவர்களுக்கு

இவர்கள் அதை அடக்கிய தன்மையினால்

"அடங்கி" இருக்கும். ஆசையும் இவை மூன்றும் இவர்களின் "தாக்குதலுக்கு" சமயம் பார்த்துக் கொண்டிருக்கும். இவர்களின், ஆற்றலின் திறமையால், இவர்கள் வாயுவை அடக்கி வாயுவோடு கலக்கும்போது "வினை உடல்" காலப்போக்கில் அழிந்து விடும். பிராரப்தத்தால் விசாரணை இல்லாத தன்மையினால், எடுத்த பிராரப்தம், அழிந்துவிடும். ஆனால் "சஞ்சிதம்" என்னும் மொத்தகர்மா (ஆசை) இவர்களுக்காக, காத்து இருக்கும். அதுவே இவர்களுக்கு, ஜன்மா கொடுக்கும். வினை உடல் காலப்போக்கில், அழிந்தாலும், சூட்சும உடல் என்ற "வாயு" சரீரத்தோடு இவர்கள்



உ

"கல்பகோடிகாலம்"!

இவர்கள் வாழ முடியும்! காரணம் இவர்கள் பிரம்மன் சிருஷ்டிக்கும், அப்பாற்பட்டு, இருப்பதால் அப்படி இருக்கவும் முடியும்! இயங்கவும் முடியும்!

காரணம்:— இவர்கள் "வாயுவை அடக்கி" அந்த "யோகபலத்தினால்" நமக்கு என "வடவாஸ ஸிருஷ்டம்" என்று, ஓர் இடத்தை, (ஸ்தாபனம் பண்ணியவர்கள் ஆகும்) நாமே சிருஷ்டித்து, அங்கு எந்த கர்த்தாக்களும், எந்த ஜீவர்களும், அங்கு செல்ல முடியாதபடி, நமக்கே தாமே, "அரண்" அமைத்துக்கொண்டவர்களாகும்!

இவர்கள் ஜீவன்முக்தி பெறவேண்டுமானால், "அதன்"! கருணையினால், எவரேனும் ஓர் ஞானி, அங்கு செல்லும் வகைக்கு, அது கிருபை செய்யும். அந்த ஞானியிடம், ஜீவன் முக்தி பெற, விதி உள்ளவன், அஸம்பாவிதமாக நடந்து, ஓர் சாபம் பெற்று, இப்பூலோகம் வந்து, ஓர் கருவுக்குள் புகுந்து, ஓர் மனிதனைப் பிறந்து, சாதனை செய்து, அப்பயனை ஓர்



உ

ஸத்குருவை அடைந்து, அவர் மூலமாக, விசார ஞானத்தால், ஜீவன் முக்தி, பெற வழி உண்டு என, ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள். இத்துடன் இதை முடிக்கிறேன்!

# "யோகிகளுக்கும், சித்தர்களுக்கும் "வாயு" சரீரமாகும்!

4. ஆகாயம், ஞானிகளின் சரீரமென்று, அனுபவ ஞானிகள் கூறுவர். இது **யோகமாயா**! சம்பந்தம் கொண்டதாகும். ஆத்மஞானிகள், ஜீவன் முக்தி பெற்றவர்களே! அப்படியானால் அவர்களுக்கு, கர்மா சம்பந்தமோ, கர்மா சம்பந்தம் இல்லையோ, எப்படி அவர்களுக்கு "**சரீரம்**" இருக்கக் கூடும் என ஓர் கேள்வி எழுவாம்? இதை கவனிக்கவும்!

ஓர் உண்மையான பக்தன், ஸ்ரீ பகவத் பிரேமையுடன், கதறி, உருகி அழுது வேண்டும் போது, அவன் **பக்குவம்** அறிந்து, "**இறைவன்**"! அவன் எண்ணத்தின் படி, ஓர் த்ரவம் தாங்கியே வர வேண்டும். அவ்வடிவம் பக்தனின் வலுவான எண்ணமே! ஆனால் அவ்வடிவம், சூட்சுமமே! ஆனால் அவ்வடிவம் ஜோதியே! (அக்னியே)

மண், பொன், பெண் என்ற மூவாசையை துறந்தவனே மனக்கண்ணை கெடுத்து அறிவுக்கண்ணை பெறும் நிலையாகும்!



உ

இங்கு இவன் மனக்கண்ணே, அறிவுக் கண்ணாக மாறியிருக்கிறது. அச்ஜோதியை, அறிவுக்கண் மட்டுமே கண்டுணர முடியும்.

இப்பக்தனின் தாபம், ஓர் மாமிஸ பிண்டமே! ஆறவும், மனம் செயலற்று,

"அறிவு" பிரகாசிக்கும்போது, அப்பிரகாசமான அறிவானது, பிரகாசமான ஸ்ரீபகவானை தரிசிக்கவும், ஸ்பரிஸிக்கவும், உறவாடவும், உரையாற்றவும், விளையாடவும் முடியும். இது பிரமாண உண்மையாகும்.

இங்கு "பிரகாசம்" "பிரகாசத்துடன் இணைகிறதென்று" பொருள் கொள்ள வேண்டும்.

இதுவே ஓர் பக்தன் ஸ்ரீபகவானை தரிசிக்கும் விதம்.

அதே பக்தன், அனுபவ முதிர்ச்சியால் ஏக்கத்துடனும், ஊக்கத்துடனும், மன உருக்கத்துடனும் "ஸ்ரீஸத்குருவை பெற்று, விசாரநாணத்துடன், தன்னை அறியும் அறிவு ஆகிய "ஆத்மஞானம்" பெற்று, முழுமையான "அனுபவம் முதிர்ச்சி" ஆகும்போது,

1. பக்தியினால், ஸ்ரீபகவான் அனுபவ உணர்வினால், இவன் "ஜோதி" (அக்னி) உருவைப் பெற்றுவிட்டான். எனப் பொருள் கொள்ளல் வேண்டும்!



2. "மூவாசையையும்" (மண் பொன் பெண்) கெடுத்து, அவன் அருளால் அவன் தாள் வணங்கி, என்ற நிலையில் "நாம" "ரூபகுணக்ரியங்களின்"! (மோஹாவேச காற்றனது) "இவனை" அடங்கி, ஒடுங்கி, மயமாகி விட்டதென, அனுபவ ஞானிகள் கூறுவர். இதன் பொருள்:-

கடும் ஆசைகள் என்ற, சண்டமாருத காற்றாகிய "வாயு" இவனை, அடங்கிய தன்மையால், இவன் வாயுவும் தாம் ஆகிவிடுகிறான். (ஆக முடியும். இது பிரமாண உண்மை) தேவையில்லை

குறிப்பு:- இதற்கு யோகமும், சித்தின் சக்திகளும் வேண்டாம்.

3. "வாயுவின்" இருப்பிடம் "ஆகாயமே"!

இவ்விரண்டும், அதி சூட்சுமமானதாகும். இவ்வாயு ஸ்தானத்தை பெறும் போது இவன், இறையாற்றலுக்கும், "அதீதமாகி" விடுகிறான். இந்நிலையில்தான், இவன் "அகண்ட பாவனையாகி"! சர்வசாட்சி நிலையை பெறமுடியும். உபநிஷதங்களிலும் வேதாந்த கருத்துக்களிலும், ஸ்ரீமத் பகவத்கீதையிலும்,



உ

கூறும் ஸத்திய வாசகமாவது:—

"திரிலோகத்தில்" ஒரு ஞானி

அவன் ஒருவனுக்கே, பழங்கால ஞானிகள்,

மஹாரிஷிகள், மற்றும், அனுபவ ஞானிகளிடமும்,

(தூலம் மறைந்தவர்கள்)

(அரூந்து ஞானிகளிடமும்)

உரையாடவோ, உறவாடவோ, விளையாடவோ,

(அனுபவ ஞான விஷயமாக)

முடியும் என, அனுபவ ஸ்ரீ மஹான்கள், சொல்லுவார்கள்.

மேலே கூறியவர்கள் "பிரம்மானந்த"

சமுத்திரத்தில், கரைந்து கலந்து, மெய்யானவர்களே!

இவர்களே, "மேலே கூறிய ஒருவனே"

கிரஹிக்க முடியும். அப்படி கிரஹிக்கும் வேளையில்,

அவர்களுக்கு, "யோகமாயாவின்" அம்ஸமான

"ஆகாயத்தையே", தற்காலிக, சரீர

மாக கொடுக்க முடியும். மேலே கூறிய, அந்த

ஒருவனும், "வாயுவும்", "ஆகாயமும்",

இணைந்து கலந்த சம்பந்தம் கொண்டவனாக இருப்பதனால்,

ஸ்ரீசு

அதிருஷ்ட சொரூப



உ

நானும், "ஆகாய" வடிவம் தாங்கி,

அந்த ஸ்ரீ மஹான்களுக்கும், "அதன் கருணையினால்!"

"ஆகாய வடிவம்" கொடுக்க முடியும் என, அனுபவ ஞானிகள் கூறுவர்!

"இது பிரமாண உண்மையாகும்!"

மேலே கூறிய, ஸ்ரீ மஹான்களும், அந்த ஒருவனும், "ஆகாய அம்ஸமாகவே" இருந்து கிப் பணணணணணணணணணணணணணணணணணி நடை பெறுவதால், அதை ஜன்மா என்றோ, அதை ஓர் வடிவம் என்றோ, கர்மா சம்பந்தம் உண்டென்றோ, மாயா சம்பந்தம் உண்டென்றோ, அதை "மனிதமனதினில்" கற்பனை பண்ணிப் பார்த்தாலும், அது அபசாரமும் இல்லை! உபசாரமும் இல்லை! அது "வியர்த்தமே!"

காலாதீத அந்த ஒன்றே, நாம் செய்ய படாத் தன்மையினால், "பிர கருணையாக" இறங்கி, யோகமாயாவின் அம்ஸத்தினால், மறைந்திருந்த உண்மைகளை, உலகுக்கு கொண்டு வரும் நிமித்தமாக, இக்காரியம் செய்கிறது என, உணர வேண்டும்.



உ (ஜீவன் முக்தி பெற்றவர்களும்)

இங்கு "தூலம்" (மறைந்தவர்களும், ஜீவன் முக்தி பெற தற்சமயம் "தூலத்தோடு" இருப்பவரும்) "பரஉபகார" நிமித்தமாக, இக்காரியம் செய்யப்படுவதால், "அவர்கள்" ஜீவன் முக்தி அடையவில்லை யென்றோ, "இவர்" ஜீவன் முக்தி அடைய, தகுதி இல்லாதவரென்றோ, எவரும் தவறான "மனக் கணக்கு" போட்டுவிட வேண்டாம்.

அப்படி போடுவதால், "அவர்களும்" கெடுவதில்லை.
" " "இவரும்" கெட்டுப் போவதில்லை.

அப்படி தவறான "கணக்கு" போட்ட மனம், "கெட்டுவிடும்" என ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள் (கெட்டுவிடும் என்றால் தோஷ குணங்களுக்கு ஆட்பட்டுவிடும் எனப் பொருள் கொள்ள வேண்டும்.)

மேலே கூறிய, அந்த ஒருவனுக்குள், "ஜோதியும்! வாயுவும்! ஆகாயமும்!" அடங்கும்.

ஆகவே ஜீவன் முக்தி பெற்ற ஓர் "திடஞானியே!" ஆகாய சொரூப சரீரம் பெற முடியும். அதை சரீரம் என,



உ

வாக்கிய விளக்கத்திற்காக, சொல்வோம்

"அனுபவநிலையில்" அப்படி

சொன்னால் அது பொருந்தாது. இந்த

↑ (அகண்ட பாவனை) அனுபவ நிலை பெற்றவர்களுக்கே, இவ்விளக்கம்,

"ஓரளவு" உணர முடியும். ஏனையோருக்கு,

இவ்விளக்கம் ஓர் "குழப்பத்தையே"!

உண்டு பண்ணும். ஆகவே, (மேலே கூறிய அனைத்தும் அகண்டபாவனையின் விளக்கமாக இருப்பதால், அந்நிலை பெற்றவர்களே உணர்வர்.)

எம் ஆனந்த குழந்தைகளே! காலம் கனியட்டும்.

"கனியும்வரை காத்திரு"!

இனி நீ கேட்ட கேள்வியை ஆராய்வோம்.

ஸ்ரீ பகவானுக்கு முக்தி உண்டா? இல்லையா??

இதற்கு விடையாவது?

ஸ்ரீ பகவான் அனுக்ரஹத்தினாலும், ஸ்ரீ ஸத் குருதேவரின் கிருபையினாலும், "பக்குவப்பட்டவன்"!

"ஜீவன் முக்தன்" என ஆகிறான்! ஆனால்,

ஸ்ரீ பகவான் என்றென்றும், "நித்தியமுக்தனே"!



ஏ........

காரணம்?

அந்த பக்குவ ஆன்மாவும், ஸ்ரீபகவானும்

"ஆத்ம சொரூபமே"!

ஆனால்?

அந்த பக்குவ ஆன்மா, "மாயாமனத்தில்"

பந்தப்பட்ட தன்மையினால், ஜீவன் எனஆனான்!

அம்மனத்தையே விசாரம் செய்து, அம்மனத்தையே,

"அழித்த" (மறைந்தாக்கிய) தன்மையினால்,

அவன் ஜீவன் முக்தன் என ஆகிறான்.

ஆனால்?

ஸ்ரீபகவான் சூட்சும சொரூபமாக இருப்பதனாலும்;

ஸ்ரீபகவான் ஜோதி சொரூபமாக இருப்பதனாலும்;

ஸ்ரீபகவான் ஜீவ பந்த மற்று, ஆனந்தமாக இருப்பதனாலும்;

ஸ்ரீபகவான் மனம் வசப்படாமல் இருப்பதனாலும்;

ஸ்ரீபகவான் மாயையை தம் வசம் வைத்து இருப்பதனாலும்;

ஸ்ரீபகவான் பரத்தின் அம்சம் முழுமையாக பெற்று இருப்பதனாலும்;

ஸ்ரீ பகவான் "நித்திய முக்தனே"!



உ

பின்னர் ஏன் இந்த ஸ்ரீ பகவான், அந்த வார்த்தையை, சொன்னான் என்றால்??

"பரிவே" பாதையாக, கொண்டவன் ஸ்ரீ பகவானும்!

"அறிவே" தம் வடிவமாக கொண்டவன் ஸ்ரீ பகவானும்!

ஓர் உண்மை பக்தனுக்கு, தாயாகவும், தந்தையாகவும், மனைவியாகவும், குழந்தையாகவும், நண்பனாகவும், உறவு சுற்றமாகவும், மற்றும் "அனைத்தும்" ஆகவும், இருப்பவன், ஸ்ரீ பகவானாக இருப்பதாலும்;

"தொண்டனுக்கும்!" தொண்டனாக இருப்பதனாலும்; "ஸ்ரீ பக்தாள் அடிப் பொடி" (தூளி) யாகவும்" இருப்பதனாலும்;

மேலே கூறிய இவ்வுணர்வை கொடுக்கும் "குருவாக" இருப்பதனாலும், தம் நிலைக்கும் (ஸ்ரீ பகவான் நிலைக்கு) அதிகமான "ஸத்குருவாக!" அவனே வருவதனாலும்;



"அப்பக்தன்"! முன்வைத்து,
தர்மப்பணிதனைப் "பின்" நிற்கிறேன்.
எனப்பொருள் கொள்ள வேண்டும்!
ஆகவேதான்? நம் பக்தனைப்பார்த்து
குழந்தே! உனக்கு ஓர் ஸத்குரு, கிடைத்த மாத்திரத்திலே,
இந்த "ஜன்மாவிலேயே"! ஜீவன் முக்தன்
ஆகிவிடுகிறாய். ஆதலால் யாமோ, சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம்,
எனும் முத்தொழிலையும், வைத்துக்கொண்டு, இந்த ஜீவர்களின்
"மனதையும், வினையையும்"!
வைத்து, விதி நாயகனை இருந்து, "ஆட்டிக்"
கொண்டும், அதன் நிமித்தமாக யாம் ஆடிக்
கொண்டும், 48 சதுர்யுகம், காத்திருந்து,
முக்தியை வேண்டிய (ஜீவன் முக்தனல்ல) "தஸ்விதி"! எமக்குள்ளது,
என சலித்துக் கொள்கிறான் ஸ்ரீ பகவான்!
இந்த சலிப்போ, நல் விதியோ, ஸ்ரீபகவானுக்கு முக்காலமும்
காணிலும், எக்காலத்தும், என்றென்றும், இல்லவே இல்லை.
இதுவே பிரமாண உண்மையாகும்!
(பக்தன் மீது காட்டும் அன்பினால் சொல்லும் உபசார வசனமாகும்)



உ

ஆனாலும்??? ஓர் உண்மை பக்தனுக்கு "ஊனோ"

ஸ்ரீபகவான் இருப்பதனாலே, அவன் சாதுவதாவது?

"நீ இன்றியாம்"! இல்லவே இல்லை,

என்றென்றும் "எமக்கு இருப்பே"! தனியாக,

இல்லவே இல்லையென்றும், அதிபவ்யமாக தம்மை,

மறைத்துக் கொள்கிறான் ஸ்ரீ பகவான்! {பக்தன் உண்டானால் ஸ்ரீபகவான் உண்டு பக்தன் இல்லையானால் ஸ்ரீபகவான் இல்லை}

ஓர் ஸத்தியவாசகம், ஸ்ரீமஹான்களால், என்ன சொல்லப் படுகிறது என்றால்?

1. "ஸ்ரீபகவானை (ணி)! ஓர் "பக்தனை வன்;" நன்னிலை (ஸ்ரீ பகவான் நிலை) பெறும்போது,

ஸ்ரீ பகவான், பேரானந்தம் அடைகிறான்!

அதைப் போலவே!

2. "ஸ்ரீஸத்குருவும்!" நம்முடைய,

"ஸத்சிஷ்யன்"! (நன்நிலை பெறுமவ்) (ஸத் குரு ஆகாமல்) "ஜீவன்முக்தன்"! ஆகும்

போது, ஸ்ரீ ஸத்குருவும், பிரம்மானந்தம் அடைகிறார்!



ஓ

இதை எப்படி உணர முடியும் என்றால்?

1. ஸ்ரீபகவான் ஓர் "தாய்ப்பூனை" யாக இருந்து கொண்டு, தம் குட்டிப் பூனையை, மிருதுவாக கௌவி எடுத்து, இடம் மாற்றி வைப்பதும்; தம் குட்டிக்கு, போஷாக்கான உணவை, (எலியை) தாமே தேடிச் சென்று, கொண்டு வந்து, ஊட்டுவது போல, உறவு சுற்றம் இவைகளிலிருந்து, "நோகாமல்" பிரித்தெடுத்து "உணவாக"! ஒழுக்க, உருக்க, ஏக்க அமைதி யின் ஆனந்த, "துவைதத்தையும்"! (இது ஸாமான்ய குரு) யானும் நீயும் சமமே என்ற நிலையில் "பேதம்" நீங்கிய "விசிஷ்டாத்வைதத்தையும்"! முறையோடு சாதனையால் உணர்த்தும், குருவாய் இருப்பது. ஸ்ரீபகவான் ஆகும்! இங்கு ஸ்ரீபகவான் வெளியானது:- வினையையும் முறையோடு கொடுத்தும், அவைகளை முறையோடு தம் யும் மாயையால் கழித்தும். அடி கொடுத்தாலும், அடி நோகாமல் பண்ணி. தம் ஊழையே பக்தனிடம், கரைத்துக் கொள்வதும், அவருக்கு நிகர் அவனே!!



உ

ஓம். அதே ஸ்ரீ பகவான், (பூனை) இதுநம் (பெரிய பூனை) நிலை பெற்று விட்டதை உணர்ந்து அதனிலும், அதிகமான, நிலையை, உணர்த்த வேணுமென்று; (ஸ்ரீ பகவானே ஸத்குருவாய் வரலாம். அல்லது ஓர் ஸத்குருவை காட்டலாம்) இந்நிலையில் வரும், ஸ்ரீ பகவான் "ஸ்ரீ குருவாய்," ஆனநிலையில், அக்குட்டி என்னும் பூனையை "பூனை" யென்னும் (~~எருக்கு~~) தன்மையை மாற்றி; அதாவது "தேகான்மா" (தேகமே ஆத்மா என்னும்) பாவனையை கெடுத்து, "பிரம்மான்மா" (ஆன்மாவே பிரம்மம் என்னும்) பாவனையைக் கொடுத்து, யாம் பரமாத்மா என்றும் "தற்போதத்தை" உணர்த்தி, "விவேக" வைராக்கிய சீலனாய் ஆக்கி, "ஞானம்" என்றும் "பட்டு" நாமாகவோ. "ஞானம்" என்னும் "ஏணி" (பரணேறிச் செல்லும்) (ஞானம் என்னும்) நாமாகவோ. ஓர் அவரைப் பந்தலில், அக்கொடியை ஏற்றிவிடும் ஓர் "உதவாக்கரை" குச்சி நாமாகவோ. இருந்து கொண்டு, "கைகாட்டும்,"



உ

ஸத்குருவின், பெருமையை, எப்படி சொல்லமுடியும்? (ஏணியோ, ருச்சியோ) படகோ! பரணோ!! பந்தலோ!!! இவைகளில் ஸத்குருவால் கரையேற்றப்படுபவன். "குற்றம் குறை"! "பேதம்" "விருப்பு வெறுப்பு"! அற்ற நிலையில், "அத்வைதானந்தம்" (ஜீவன்முக்தி நிலை!) பரிபூரணமானவரை, மகானாக்கப்பண்ணுகிறார் ஸத்குரு. மேலே கூறிய, இவைகளெல்லாம், உற்றுணர்ந்து, நோக்கும்போது, காலாதீத பர சொரூபமே, பந்தப்பட்ட ஜீவனாகவும், அவன் பந்தத்தை நீக்கும் ஸ்ரீபகவானாகவும், ஜீவன்முக்தியை அருளும், ஸத்குருவாகவும். இருக்கிறது என உணர வேண்டும்! காலாதீத பர சொரூபமே, "ஸ்ரீஸத்குரு"வாயும், "ஸ்ரீபகவானாக"வும், விளங்குவதால், அவ்விரண்டும், "நீதி" கண்டு செயல்படுகிறது எனமட்டும் உணரவேண்டும். ஆகவே ஓர் பக்தன் ஞானி ஆகும்போது, அவன் ஜீவன்முக்தனே! ஆனால் ஸ்ரீபகவான் நித்தியமுக்தனே! ஆகும்.

உ



## 1.D. "வாக்கே வாழ்க்கை"

ஸ்ரீமஹான்கள் வாக்கும், எப்படி அமைகிறது என்றால்?

"வாக்கே" { அக்கினி என்றும், அமிர்தம் என்றும், } நம் அனுபவத்தால் சொன்னார்கள்.

ஸங்கல்பமே (நரகம்) உலகம் என்றும்; ஸங்கல்ப ரஹிதமே (எண்ணங்களை அழித்தலே) "மோக்ஷம்" என்றும் சொன்னார்கள். இதன் உட்கருத்து யாதெனில்? எண்ணமே "வாக்காக" வருகிறது என்றும், வாக்கே "செயலாக" முடிகிறது என்றும், பொருள் கொள்ளல் வேண்டும். சாதாரணமாக ஓர் ஜீவனுக்கு, இன்பமும் துன்பமும், எப்படி "சூழ்ந்து" அவையே, "புண்ணிய பாபமாக!" விளைகிறது என கவனித்தால், அவன் "வாக்கே" காரணமாக அமையும், என்பதே ஸத்தியம். இதைத்தான் எம் வள்ளுவன் சொன்னான்: யாகாவாராயினும் (வேதம் இவ்வாறு நியதியில் "எவராயினும்") நாகாக்க "நாவை" அடக்கிப் பாதுகாத்துக் கொள் என் ஆணித்தரமாக சொன்னான். அதை அனுசரித்தே,



உ

எம் இறைவனும், நம் நாவுக்கு, இரண்டு "தடை" (ஆடு) விதித்தான். போட்டான்.

ஒன்று வரிசைப் பற்கள். மற்றொன்று, இரண்டு உதடுகள். ஆனாலும், பிரயோஜனம் இல்லை! எவாடலொட வார்த்தை குறைவதில்லை.

குறிப்பாக:— ஒருவனுக்கோ, அவன் குடும்பத்திற்கோ கேடு விளைவதல்லாம், அவரவர் "வாக்கே" காரணமாக அமைகிறது. இதற்கு எண்ணமே முதலிடம் பெறுகிறது. இந்த எண்ணம், தூய்மை ஆக வேண்டுமானால், "இறைகுரு" உணர்வு வேண்டும்.

இறைகுரு, உணர்வு இருந்தால், பிராப்த வினை சம்பந்த, எண்ணமும் வாக்கும் மட்டுமே, வருமேயன்றி, வேறு எண்ணமும் வராது. அதைச்சார்ந்த வாக்கும் வராது.

1. கேடு வரும் பின்னே! மதி கெட்டு வரும் முன்னே!
என்பதன் பொருள்:- "மதியை" (புத்தியை) கெடுக்க: "வாக்கு" முதலில் வரும் என கொள்க.

2. கெடுபவனே கேடு நினைப்பான்! என்பதன் பொருள்: பிறர் மேல் "போட்டி, பொறாமை" கொண்டு; அவனைக் கெடுத்து, நாம் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும் போது, இவனுடைய, ஆகாமிய வினையின் படி, (அஹங்கார, அதிகார, ஆதிக்க, அபிமான வினையின்படி)



உ

இவனைக் கெடுக்கும் நிலைக்கு "வாக்கு" முதலில் வரும் என கொள்க!

3. வல்லான் வகுத்ததே வாய்க்கால்! என்பதன் பொருள்! ஸ்ரீபகவான் காரியமானது "மாயா"வாக இருந்தாலும், அந்தந்த ஜீவர்கள், அவரவர் வினைகளை, அவரவர், ஒழுங்காக பகிர்ந்து கொள்ளும் நிமித்தம், "அவரவர் வாக்கையே"! பயன்படுத்தி, பாரபட்சம் தோஷமில்லாமல், ஒழுங்காக முடிக்கிறான். என பொருள் கொள்க. ஆதலேதான், இறைவன் இச்ஜீவர்களுக்கு, "வாய்க்கால்" (ஜலம் கிரமமாகச் செல்லும் வாய்க்கால் போல்) என சுட்டிக் காட்டுகிறான்.

4. வினை விதைத்தவன் வினையைதான் அறுக்க வேண்டும்! என்பதன் பொருள், நல்வினை தீவினை என்ற புண்ணிய பாபங்களை, எவரெவர்! எங்கெங்கே! எந்நிலையில்! எப்படி எப்படி, "நம்வாக்கால்"! விதைத்தார்களோ, அவரவர், அங்கங்கே, அந்தந்த நிலையில், அப்படி அப்படி; தம் "தாபத்தால்"! வருந்தி தாமே அனுபவிக்க வேண்டும்!



உ

5. செய்த வினை, செய்தவருக்கே!
என்பதன் பொருள்:— செய்வினை
என்ற "கடும்", "கொடும்!"
வினையும் இல்லை! அதை உனக்கு
செய்தவரோ, செய்பவரோ, செய்விப்பவரோ,
முக்காலமும், எக்காலமும், இக்காலமும்,
"இல்லவே இல்லை!" யென, பிரமாண
மாகச் சொல்வோம். "உன் வாக்கே!
உன்னை அக்கொடும் அக்கினியாக சுடுகிறதென,
மட்டும் உணர்வாயாக!
இதில் "முன் பின் வினைகள்"
உன்னை பாதிக்கிறதென, உணர்வாயாக. நீ
அறிந்தோ, அறியாமலோ, பேசும் வாக்கானது,
"கடும்!" "சுடும்!" "கொடும்!"
வாக்காக வந்தவைகளே, இன்று உன்னை, உன்
"செய்வினையாக"! உன் வாக்கே உன் வினையாக மாறியது. அது பிறர் வினையல்ல.
மாறி, உன்னை தாக்குகிறதென,
மட்டும் உணர்வாயாக. அன்றே, இன்றே, என்றே,



உ

உன் ஆத்திர கோபாவேசத்தில்,

"வெடித்த வாக்கே!

இன்று பலன் தருகிறதென,
உணர்ந்து, சாந்த சமாதானம் கொண்டு
அமைதி காப்பாயாக. மேலும் "குமுறினால்!"
அதன் விளைவு, என்ன ஆகுமோ, என சொல்ல முடியாது.
ஆகவே, "அடங்கி அமைதி" காத்தலே
அதன் பரிஹாரம் ஆகும்.
எவரோ நமக்கு, செய்வினை செய்திருக்கிறார்கள்,
எனக் கருதி, அதற்கு நீ "பரிஹாரம்"
செய்தால், அப்பரிஹாரமே உனக்கு "வலி
வினையையும்" கொடுக்கும். அதுவே
காலத்தை தாமதமாக்கிக் கொண்டு, உன்னை பழி
வாங்கும், எனவும் உணர்வாயாக!
"பரிஹாரம் என்பது ஓர் "பாபச்
செயலாகும்" என, அனுபவ ஸ்ரீமஹான்கள்
சொல்லுவார்கள். ஆனால் இன்றைய கலியில்,
பரிஹாரமே ஓர் "நாகரிகை" எனப் பேசப்
படுகிறது.



உ

காரணம்:- பவினை, சற்று மாற்றி, அமைத்துவிடுவதால், அதை அப்படி நம்ப வேண்டிய சூழ்நிலை, உருவாகி விட்டது. இனி இதை மாற்றவோ, மறுக்கவோ விலக்கவோ, முடியாது.

எப்படி என்றால்? "பிராப்த கர்மா" ஓர் "சுகமான" கர்மாவாகும். ஆகாமிய கர்மாவே "வலுவுள்ள" கர்மாவாகும், மேலும் மன எண்ணங்களிறல் "அழுந்தும்போது" அதாவது, பொறுமையோடு, இறை வுணர்விறல், அதை ஏற்க முடியாமல், பரிஹாரம் செய்யும்போது அதாவது கர்மாவை மாற்றி அதை தடைசெய்யப்படுவதனால், அது "விகாரம்" அடைந்து, அந்த உபாதையை, விட்டுவிட்டு, சிலகாலங்களில், வேறுஓர், கடின உபாதையைக் கொடுக்கும். ஆகவே வருவதை இது நம் வினையே, என ஸ்ரீபகவன் நாமஸ்மரணையுடன், ஏற்றுக் கொண்டால், ஏற்று வந்த வினை, முடிவுறும். வேறு எந்த வினையும், தொடர்வுறாது. இங்கு அவஸியம் "வாக்கு அடங்கி" இருக்க வேண்டும்.

வாக்கு நமக்குள் அடங்குவதைத்தான். நீ அடங்கிறல் உலகம் உன்னுள் அடங்கும் என்றும், நீ உலகை அடக்க எண்ணிறல், உலகம் உன்னை அடக்கிவிடும் என்றும் ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள்.



உ

வாக்கே வாழ்க்கையாகவும், வாக்கே
புண்ணிய பாப கர்மாவாகவும், வாக்கே
சொந்த, பந்த, பாச, உறவு பிணைப்பாகவும்,
வாக்கே நமக்கு சந்தோஷத்தையும்,
பிறருக்கு கஷ்ட நஷ்டங்களையும், கொடு
ப்பதாலும், வாக்கே சுவாசத்தை வீணாக
பெருக்கி, ஆயுளைக் குறைப்பதாலும், வாக்கை கொடுத்து
வாங்குவதால், அது ஓர் சங்கிலிக் கோர்வையாக இருப்
பதாலும், பேசிப் பேசிப் பேசியே, வீண் காலம் கடந்து
போவதாலும், வாக்கே **"அடங்காது"**

எனஆகி, உள்ளோ சென்று, மீட்பு தெரியாமல், கடும்
அவஸ்தைகளை, அனுபவிக்க நேருவதாலும், வாக்கை குறைத்து
குறைத்து குறைத்து வந்தால் வாக்குதானே நின்றுவிடும், என
உணர வேண்டும். இறையுரு உணர்வுடன் இருந்தால், அதுவே,
ஸ்ரீபகவான் கருணையினால், தேவையான வாக்கு வரும்!
தேவையற்ற வாக்குதானே நின்றுவிடும்! இது இப்பைத்தியத்தின் ஸ்வய அனுபவமாகும்.

**"இறையுரு"** உணர்விருந்தால், வாக்குதானே அடங்கும்.
**"நாமரூப சொந்தபந்த உணர்ச்சி"** இருந்தால், வாக்கும் பெருகும். கர்மாவும் பெருகும்.
ஆகவே **வாக்கில்** கவனம் தேவை!
எல்லாம் ஒன்றே! அதுநவமே!

பாபா.

அதுயாமே! அது நீங்களே! இது ஸத்யம்! ஸத்யம்!! ஸத்யம்!!!

# "பிரார்த்தனை"!!!



ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்"!

"ஸத்குரு திருவடி துணை"!
"நம்பினோர் கெடுவதில்லை"!
"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்";
"ஓம்"
"அகம்பிரம்மம், ஜெகம் பிரம்மம்";
"அகமே எல்லாம்!"
"ஜெகம், பரமும், ஜீவர்களும்";
"சிறிதும் இல்லை!"

"ஒன்றென்றிரு"! "தெய்வம் உண்டென்றிரு"!
"நாட்டம் ஒன்றே இரு"! "ஸத்குரு பாதத்தை நம்பு"!
"பொம்மலாட்டம் என்றே இரு உடல்! "அடர்ந்த சந்தைக்கூட்டமென்றே இரு உறவு"! "வாழ்வை ஓர் குடம் கவிழ் நீர் ஓட்டமென்றே இரு! உபதேசம் இதுவே!

உ



"பிரார்த்தனை"!!!

"ஆசையினால் வரும்", "மோஹத்தையும்"! மோஹத்தினால் வரும் "கோபத்தையும்"! "கோபத்தினால் வரும்" "அறிவு மயக்கத்தையும்"! "அறிவு மயக்கத்தினால் வரும்", "ஆத்மநாசத்தையும்"! அந்த ஆத்மநாசத்தினால், "நாங்களும்" (அதாவது குருவும், சிஷ்யர்களாகிய நாங்களும்) நாசம் ஆகாதபடி" எங்கள் "அனைவரையும்"; "காப்பாற்றி அருள்வாயாக"!

"காப்பாற்றி அருள்வாயாக"!!

"காப்பாற்றி அருள்வாயாக"!!!

என மும்முறை ஸ்ரீகுருதேவர் சொல்கிறார்! சொல்ல வேண்டும்!



உ

எம் ஆத்மானந்தக் குழந்தைகளே!

இந்த பிரார்த்தனையானது,

ஓர் "ஸத்குருவானவர்"

தம்முடைய, உத்தம சிஷ்யர்களுக்காக,

செய்யும் பிரார்த்தனையாகும்! "காரணம்"!

இது கலியுகம் ஆகும். இந்தயுகத்தில் மட்டும்,

குற்றம் குறை! பேதபார்வை, பேத செய்கை!

விருப்பு வெறுப்பு! அவஸ்யம் இருந்தே ஆக வேண்டும்.

இதை திரிகர்த்தாக்களாலும் நிவர்த்தி செய்ய முடியாது.

மேலே சொன்ன, மூன்றும் "மாயாவின்"!

காரியமும் அல்ல! "மந்திர தந்திர"

காரியமும் அல்ல!

இது இம் "மனதின்" ஜாக, வாஸ, தோஷ,

"பழக்க" (வாக்கின் விபரீதம்) "வழக்கம்"

(செய்கையின் பிணைப்பு) "ஆகும்"! ஆகவே,

"குரு":— நிர்மலமானவராக இருக்கவேண்டும்!

பொறுமையின் சிகரமாக இருக்க வேண்டும். "குருபர

உணர்வோடு"! இருக்க வேண்டும்.

நாமரூப ஜகஉணர்வு கூடாது!



நாவாதீத
அந்த "ஒன்றை" நம் ஸ்வய
அனுபவ நிலையில், உணர்ந்து, அதுவே
நாமாய்; நாமே அதுவாய்! ஆன
"ஸ்வயஅனுபவ" நிலையில் இருக்க வேண்டும்

ஆனால் ???

"சிஷ்யன்:— முன்னே சொன்ன (நோய் குணங்கள் குற்றம் குறை பேதம்! விருப்பு வெறுப்பு) உள்ளவனாகவே இருப்பான்.

ஆனாலும், அவைகளை, விடுவதற்கு தயார் நிலையில் இருப்பான்.

மேலும், மண், பொன், பெண் என்னும், மூவாசையும்;

சத்வம், ரஜஸ், தமோ, குணங்களென்னும், முக்குணமும்;

சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம், என்னும், மூவினைகளும்;

ஆணவம், கன்மம், மாயை, யென்னும் மும்மலமும்;

அறியாத தன்மை உள்ளவனாகவும்; நான், என்னுடையது, என்ற நிலையில்; அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம், அபிமானம் இவைகளுடன்,

"உடைமையும்! உரிமையும்!"

இணைந்த நிலையில், ஆறுகுண சம்பந்தத்தையும் உடையவனாகவே இருப்பான்.



உ

இப்போது ஸ்ரீ குரு தேவர், நடத்தும்
அநுபவ பாடமானது, இதுகாலபரியந்தம்,
படிக்காத ஒன்றும் கேட்காத ஒன்றும்!
"மாபெரும் புதிராகவும்"
இவைகளை, நாம் அநுபவரீதியில், ஏற்றுக் கொண்டால்
"நம்பிக்கை" என்னவாகும்? என்ற சந்தேகம்,
களங்கம், கலக்கம், பயம் நிறைந்த "மனதை
உடையவனை"! அதை
ஏற்க முடியாமல், விழுங்கவும் முடியாதவனை;
துப்பவும் முடியாதவனை! மரண அவஸ்தையினால்
பீடிக்கப்பட்டவனை; சஞ்சல மனதுடையவனை இருப்பான்.
ஆனால்?
அந்த சிஷ்யனுடைய, பூர்வ கர்ம புண்ணிய பலத்தினாலும்;
ஸ்ரீ பகவான் கருணையினாலும்; அவனுடைய "ஏக்கம்"
"ஊக்கம்"! உலக வாழ்வு போதும் என்ற "நிறைவு"
அவனுடைய உண்மையான "சிரத்தை"! இவை
கனிதல் பவபந்த அனைத்தி காப்பான். இவன்,



ஓர் "பக்தியையும்"! அதே நேரம் "அபக்தியையும்"! இருப்பதால், இவன் நிலையானது, தர்ம சங்கடமாகத்தான் இருக்கும்! இருக்க முடியும்!

பக்தி:- ஞான வேட்கையும் உண்டு!

அபக்தி:- அதே நேரம், நாம் என்ன ஆவோம்? என்ற "பயம்!" மேலும் மமதைய கலக்கமிதி! உடையவன்.

இவைகளே குரு சிஷ்ய பாவனையின்; "உணர்வுகளாகும்!!!"

இந்நிலையில், ஸ்ரீ குருதேவரின் பிரார்த்தனை, ஸ்ரீ பகவானை நோக்கி இராது! ஸ்ரீ பரம்பொருளை நோக்கி இருக்கும். காரணம்:- இங்கு ஸ்ரீ குருதேவர்! ஸ்ரீ பகவானிலும்! "அதீதமான" நிலையில், இருந்து செயல்படுவதால்; அவருடைய பிரார்த்தனையும், ஸ்ரீ பரம்பொருளை, நோக்கியே இருக்கும்! இங்கு ஓர் உண்மை, எப்படி விளங்குகிறது என்றால்? இவரின் "அத்வைதபாடமாகு!"



உ

நிர்க்குண நிலையிலும், எம்பிரவர்த்தியுமற்ற "நிவர்த்தி" மார்க்கமாக இருப்பதாலும், ஸ்ரீபகவானுக்கோ, அவன் யோகமாயாவுக்கோ, சம்பந்தமற்றிருப்பதாலும், "யோகமாயா" சம்பந்தம், கொண்ட தன்மையாலும், அந்த காலாதீத ஒன்று, செயல்படாத் தன்மையாலும்; அக்காலாதீத ஒன்றின் ஆதார அம்சம் "சதா சிவத்திடம்", முழுமையாக, பொருந்தி இருப்பதனையும். இங்கு, குருதேவர் பிரார்த்தனையானது, சதாசிவத்தையே, "ஹே பரம்பொருளே" எனக் கூறிவிடுகிறார், என உணர வேண்டும்!

அப்பிரார்த்தனையின் அம்சமாவது:— சந்தேக கலக்க பயத்தோடு இருக்கும் அந்த சிஷ்யன், "நாமரூப ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகளும்,



உ

துக்கம் சந்தேகம் பயம் வரலாம்.
அது ஸ்ரீகுருதேவர் அருளும், விசார
ஞானத்தால், நிவர்த்திக்கப்பட்டுவிடும்.
அவன் பரிபாஹப்பட்டுவிடுவான்! ஆனால்???

"ஸ்ரீகுருதேவரையே" நோக்குடன், சந்தேக
களங்கம், கலக்கம், பயம் கொண்டு "நபமண"
அவருடைய
எண்ணம் கொண்டு, (நடை, உடை, பாவனையில்!)
(ஐ) சந்தேகம் கொண்டால், அச்சிஷ்யன் கெட்டுப்போவான்.
என ஸ்ரீமஹான்கள் சொல்வர்!

ஆகவேதான், ஸ்ரீகுருதேவர் பிரார்த்தனையில்:—

1 முதல் வாசகத்தில்:— ஹே பரம் பொருளே! ஸ்ரீ ஸத்குரு சிஷ்யர்களாகிய எங்களை, "சிரேயஸுடன்!" இருக்க அருள்வாயாக! என்கிறார்.

அதாவது:— பரமார்த்திக அனுபவத்தில், சிரேயஸ் என்றும், பிரேயஸ் என்றும், இருநிலைகளை சொல்லுவார்கள். சிரேயஸ் என்றால்; "சுகமான ஆனந்தம்!" என்றும்; பிரேயஸ் என்றால், "இன்பமயமான துக்கம்!" என்றும்; பொருள் கொள்ள வேண்டும்!



உ

சுகமான ஆனந்தம் சரி! ஆனால் இன்பம் எப்படி துக்கத்தை கொடுக்கும், என கேள்வி எழுவாம்? இன்பமும் துன்பமும் ஒன்றே!

இதற்கு விளக்கம், அனேக இடங்களில் கொடுத்திருக்கிறோம். இது ஓர் நாணயத்தின் இருபக்கம் போன்றது. நாணயம், இல்லையென்றால் இன்பமும் துன்பமும் இல்லை.

அதாவது, "உலக நாமரூபம்" என்பது, ஓர் நாணயம், போன்றதாகும். அது "மாயை விக்ஷேப கலக்க" பாவனையாகும்!

ஆனால், பசுத்தன்மையும், அதன் பாசத்தன்மையும், ஒழிந்த இடமே, ஆனந்தம். அங்கு "சுகம்" தவிர, அன்னியம் எதுவும் இல்லை. ஆகவே ஸ்ரீ குருதேவர், குரு சிஷ்யர்களாகிய, எங்களுக்கு, இஷ்டம் என சொல்லும், சுகமான ஆனந்தம், வேண்டி பிரார்த்திக்கிறார்.

உரெண்டாவது வாசகத்தில்:- எங்களுடைய, ஸ்ரீ ஆன்ம நாட்ட முயற்சிக்கு "முழுபலத்தையும்"! கொடுப்பாயாக, என பிரார்த்திக்கிறார்.

அதாவது:- நிர்க்குணமயமாம்! "குணதோஷம்" நிறைந்த, எம் சிஷ்யர்களும்,



உ

ஜீவன் முக்திக்காக, குருதேவருடன்,

"இணைந்து" செயல்படுவதால், எந்த

எங்களுக்குள், "அபிப்ராய பேதம்" (எண்ணம், சொல், செயலிலும், பேதத்ருஷ்டியோ, பேத உணர்வோ, பேத "வாக்கோ") உண்டாகாமல், எங்கள் ஆன்ம விசாரணை பாடத்தை, சிறப்பாக நடத்தி, முடித்துக் கொடுப்பாயாக, என பணிவுடன் ஸ்ரீ குருதேவர் வேண்டிக் கொள்கிறார்.

3. மூன்றாவது வாசகத்தில்:— எங்கள் "மனச்" சோர்வை அகற்றி, "தீரமுடன்" நாங்கள் உழைக்க, அனுக்ரஹிப்பாயாக, என சொல்லி முடிக்கிறார்.

அதாவது:— எம் அத்யந்த சிஷ்யர்களின், மனம் வினை சம்பந்தம் கொண்ட நிலையில், இருப்பதால், "வினையால்"

(தாபம் நசுக்கப்பட்டு, கசங்கி பிழியப்படும் போதும்)

(சாதனையின் கால தாமதத்தால், மனம் அயர்வுறும் போதும்)



# "சோர்வு" "அயர்வு"!

தூங்கத்தால் வரும் கலக்கம்! கலக்கத்தால் வரும் சந்தேகம்! சந்தேகத்தால் வரும்,

# "பயம்" "துக்கம்"!!!

இவைகளை, முழுமையாக நீக்கி, தீரமுடன் செயல்படும்,

# "விவேக வைராக்கியத்தை"

கொடுப்பாயாக என, பணிவுடன், ஸ்ரீ குருதேவர், ஸ்ரீ பரம் பொருளை, வேண்டுகிறார். பக்கம் இரண்டில் குறிப்பிட்டபடி :— கடையில் வரும் பிரார்த்தனையானது :— **"ஆசையால்"** வரும்

# "மோஹத்தையும்" :—

ஆசை என்பது சபலத்தாலும், சலனத்தாலும் (சின்னசின்ன, ஆசையென்றும் நப்பாசையென்றும்) உண்டாவதாகும். இது இறை குரு, உணர்வு (எல்லாம் அவன் பொருள், எல்லாம் அவன் செயல் என்ற உணர்வு) இருந்தால், ஆசை **அளவோடும்** பிராப்தத்தின் படியும் தான் வரும். **ஆகாமிய** ஆசையின் நிலையில் வராது.

சின்னசின்ன. ஆசைகள், உண்டாகும் போது, இறைகுரு கருணையால், அது விரிவடையாது. நான், என்னால், என்னுடையது, என்ற நிலையில், ஆசை வந்தால் அது **"மோஹமாய்"!** அவஸ்யம் மாறும்.



மோஹம் :- இது ஓர் மாயாவின் திரையாகும். இது மனக் கண்ணை திறந்து, அறிவுக் கண்ணை மூடும் நிலையாகும். இது ஓர் "வெறித்தனமான", ஆர்ப்பாட்டமாகும்.

அந்த மோஹ வெறி, ஒருவனுக்கு வரும் போது, நாம் என் செய்கிறோம்? என்ன பேசுகிறோம்? என்ற "அறிவே" இல்லாமல், நாம் அப்போது வருவது கோபமல்லவா! அது "கோபாவேசம்" (கோபத்தில் வரும், ஆவேசம்) ஆகும். இதைத்தான் ஓர் அன்பர் பாடும்போது, கோபாவேசத்தில் ஓர் காரியம் நடந்து, "நாசம்" ஆனபின்பு; (நாலும் நடந்து, முடிந்த பின் தான், நல்லது கெட்டது தெரியும் என்றார்) பின் வருந்த நேரும். பின் வருந்தி பிரயோஜனம் இல்லை.

2. "மோஹத்தால்" வரும் "கோபத்தையும்"! :- ஆத்திரக்காரனுக்கு, அறிவு சூனியமாகிவிடும்! என்றும்; கோபம் சண்டாளன் என்றும்; வேகம் படுகுழி! என்றும்; மோஹமும், கோபாவேசமும் அழிவின் அறிகுறி! என்றும்; ஸ்ரீ மஹான் களால், அனுபவ நிலையில், சொல்லப்படுகிறது.

3. "கோபத்தால்" (கோபாவேசத்தால்) வரும் "அறிவு மயக்கத்தையும்"!



"அறிவு" என்றும், "ஆத்மா"!
என, ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்.
"அறிவுருவாகிய ஆன்மாவே"
என, ஸ்ரீமத் ரிபு கீதையிலும் சொல்லப்படுகிறது.
ஆகவே கோபாவேசம் என்று, சொல்லக்கூடிய, "ருத்ர, தாண்டவ, ஆவேசம்" வரும்போது,
அறிவு என்ற ஆன்மா, "மறைபடுகிறது"!
அந்நிலையை, அஞ்ஞானம் என்றும்; கவனக்குறைவு என்றும்;
அறியாமை என்றும், சொல்வதைவிட, அதுவே பிறவியின்
மாயாபீஜமாக, இருப்பதால் அதை "ஜனனவா
கிரகம்"! என்றும் சொல்லலாம்; இங்கு
அறிவு என்ற, ஆன்மா மறைந்து, அஹங்காரம்!
அதிகாரம்! ஆதிக்கம்! மேலோங்கி, ஸம்ஸார
"ஸாகரத்தில்" (கடலில்) மூழ்க
டிக்கப்படுகிறான்! அதாவது,
ஜனன மரணமென்னும், "பிறப்பிறப்பை"!
அடைகிறான், எனப் பொருள் கொள்ளல் வேண்டும்!



# ஸ்ரீ "அறிவு மயக்கத்தால்" வரும், "ஆத்ம நாசத்தையும்:-

அதாவது, ருத்ர தாண்டவ கோபா வேசத்திறல், "அறிவு" மயங்கிவிடுகிறது. என்று சொல்வதைவிட, சூரியனை எப்படி, கார்மேகம் மறைத்து, சூரியன் இல்லை, என்ற நிலையை, எப்படி உண்டு பண்ணுகிறதோ, அதே நிலையில், அறிவு மறைகிறது. அஞ்ஞான இருள் சூழ்கிறது. இங்கு, அறிவு மறையும் போது, {ஆத்மா நாசமாகிறது} என, ஏன் சொல்கிறோம் என்றால்? "ஆத்மா" மறைவதுமில்லை! தேய்வதும் இல்லை! கூடுவதுமில்லை!, குறைவதும் இல்லை! பின் ஏன் இந்த "நாசம்" (அழிவு) என்ற வாசகத்தை, போடுகிறார்கள் என்றால்? ஆத்மாவே, பந்தப்பட்ட தன்மையிறல், ஜீவன் என பேசப்படுகிறது. இந்த பந்தம் என்ற போர்வையை, விலக்கிவிட்டால், அது ஆத்மாவே! இங்கு, வாக்கிய விளக்கமாகவும், வியவகார ஸத்தியமாகவும், நாமரூபம் பேசப்படுவதால், வாக்கிய விளக்க "ஜீவனவன்!" (எந்த ஓர் மனிதனும்) ஜீவபந்த நிவர்த்தி செய்யாதையின், அவன் இருந்தும் "இறந்தவனே!"



ஆகவே நான் இங்கு இதை "ஆத்ம ஞானம்" எனப் பேசப்படுகிறது! ஓர் நிலையில், அறிவே, ஆத்மா என்றும், சொல்லலாம். மேலும் ஓர் நிலையில், "அறிவே, ஆத்ம உணர்வை" உண்டுபண்ணி, அந்த அறிவே, ஆத்மாவில், சமுத்திரத்தில், உப்புப் பதுமை யென, கரைந்து விடும், என்றும் சொல்லலாம். இதில் ஓர் உண்மை என்னவென்றால்? "புத்தி" பிரகாசித்தால், "நாமரூப" ஜகம்! தோன்றும் என்றும். அப்புத்தியே, நிர்குண்யமாகி "அறிவு" எனப் பிரகாசித்தால், நாமரூபஜகம் மறைந்து "ஸ்ரீபகவான்" பிரகாசிப்பான் என்றும்; அதே அறிவு, ஸ்ரீபகவானே நாமாகி, நாமே ஸ்ரீபகவானாகி, நம் "மாயாகார்யமான" ரூபலாவண்யத்தையும்! மஹிமை பிரபாவத்தையும்! விட்டுவிட்ட நிலையில், அறிவின் ஸ்ரீ பகவத்சொரூபம், நம் இருப்பை விட்ட நிலையில், "அதுவே ஆத்மா"!



எனப் பூரணத்துவம் பெற்று விடுகிறது.

ஆகவே, அறிவே அனைத்துமாய் இருக்கிறது

என ஸ்ரீமஹான்கள் தம் அனுபவத்தில் சொல்வதுண்டு.

5. "ஆன்ம நாதத்தில்"

"நாங்களும் நாசமாகாதபடி"

(நம்மையும்) (குருவையும், சிஷ்யர்களையும் இணைத்தே சொல்கிறார்)

எங்கள் அனைவரையும், காப்பாற்றி அருள்வாயாக என முடிக்கிறார்.

இங்கு, ஓர் உண்மை எப்படி பிரகாசிக்கிறது என்றால்?

"ஸத்சிஷ்யன்" இல்லாமல், ஓர் "ஸத்குருவுக்கு" பெருமையும் இல்லை! "தனியே" இருப்பும் இல்லை! ஆனால், அவர் "அதுவாக, எக்காலமும்" இருப்பார்!

அதேபோல்?

ஓர் "ஸத்குரு" இல்லாமல், "ஒருவன் "ஸத்சிஷ்யனாக" இருக்கவும் முடியாது! ஸத்சிஷ்யன் "ஆகவும்" முடியாது! ஆனால் கோடானு கோடி ஸாமான்ய சிஷ்யர்களும், குருமார்களும் உண்டு!



உ

ஐந்தாவது பாக்கியத்தின்படி:-

ஆன்ம நாசத்திலும், "நாங்களும்"

(ஸத்குருவும், ஸத்சிஷ்யர்களும்)

நாசமாகாதபடி, எங்கள் அனைவரையும் காப்பாற்றி அருள்வாயாக!

ஹேபரம் பொருளே! இது கலியுகமாகவும், கோர குணங்கள் தலைவிரித்தாடுவதாலும், அஹங்கார, அதிகார, ஆதிக்க வெறியால், "உடமை" கீரா, எனதுஎன்று, விட முடியாத் தன்மையாலும், "உரிமை" போராட்டம், என்ற நிலையில், உலகமும், ஜீவர்களும், அதி வேகமாக, "அழிவுப்பாதையை" நோக்கி, வெகு வேகமாக, போய்க்கொண்டிருப்பதாலும், ஒருவர் சொல்வதை, ஒருவர் கேட்கக் கூடாது, என்ற, "அவலநிலை" ஏற்பட்டு விட்டதாலும், ஆத்ம பக்தியோ, அனுபவ ஞானமோ, எல்லாம் இல்லாமல் அவைகள், வியாபாரமாகவும், விளம்பரமாகவும், ஆடம்பரமாகவும், ஆகிவிட்ட தன்மையாலும்,



மண்ணும், பொன்னும், பெண்ணும்,

"பிரவர்த்தி" என்ற நிலையில்

"மயக்க போதையில்"

தவழ்ந்து இருப்பவர்களையும், "நிவர்த்தி மார்க்கம்" என்ற நிலையில், எவரும் "வழி காட்டிகள்" இல்லாத தன்மையாலும்,

"ஹே பரம்பொருளே"!!!!!

ஸத்குரு! ஸத்சிஷ்யர்களாகிய! ஞானிகள் "அனைவரையும்"!

காப்பாற்றி அருள்வாயாக! காப்பாற்றி அருள்வாயாக! காப்பாற்றி அருள்வாயாக!!!

எல்லாம் நீயே! எல்லாம் நீயே!! எல்லாம் நீயே!!!

எல்லாம் ஒன்றே!

அது நவமே! அது சிவமே!

பாபா.

அது யாமே! அது நீங்களே! இது ஸத்தியம்!!!


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!